# தீர்வுக்கான மாற்றுத்திட்ட யோசனை இல்லை; இன்றைய நிலைக்கு இலங்கை அரசே காரணம்!

## சென்னையில் முன்னணி அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் இன்று உள்ள நிலை பற்றி முழு அளவில் ஆராய்வதற்காக ஈழ தேசிய விடுதலை முன்னணியின் முக்கிய கூட்டம் ஒன்று சென்னையில் நேற்று நடைபெற்றது. இனப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு இலங்கை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள நகல் திட்டத்தை நிராகரித்து மாற்றுத் திட்டமொன்றைச் சமர்ப்பிப்பதற்கான யோசனை எதுவும் தமக்கில்லை என்று இக்கூட்ட முடிவில் நிருபர்களிடம் கருத்துத் தெரிவித்த முன்னணியின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். இலங்கையில் இன்று ஏற்பட்டுள்ள தேக்க நிலைக்கு அரசே பொறுப்பு எனவும் மாற்றுத் திட்டத்திற்கான உத்தேசமும் அரசையே சாரும் எனவும் அப்பிரதிநிதி மேலும் தெரிவித்தார். இப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மத்திய அரசிடமிருந்து அழைப்பு எதுவும் இதுவரை தமக்கு அனுப்பப்படவில்லை எனவும் அவ்வாறு அழைப்பு வந்தால் தாம் புதுடில்லி சென்று வெளியுறவுச் செயலர் திரு. ரமேஸ் பண்டாரியிடம் இப்பொழுதுள்ள நிலையை தெளிவுபடுத்தப் போவதாகவும் அவர் கூறினர்.

Registered as a Newspaper in Sri Lanka

ஈழமுரசு

முரசு 2 3-11-85 ஞாயிற்றுக்கிழமை (ஐப்பசி 19 வைபரி 18) முழக்கம் 269

★ நாளையும், மறுதினமும் புகார் செய்தவர்களையும், எதிர்தரப்பையும்

# யாழ் அசோக் ஹோட்டலில் கண்காணிப்புக்குழு சந்திக்கும்

## ராணுவமும், பொதுமக்களும் தனித்தனி விசாரணை

யாழ்ப்பாணப் பகுதி மக்கள் பிரஜைகள் குழுக்களு... செய்த யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு நாளை காலை விசேட விமானத்தில் யாழ்ப்பாணம் வருகின்றது. நாளையும், நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமையும் இக்குழு யாழ்ப்பாணம் அசோக் ஹோட்டலில் கூடி விசாரணைகளை நடத்தும்.

புகார் செய்த பொதுமக்களும், பாதிக்கப்பட்டவர்களும், சாட்சியக் காரர்களும், குழுவினால் முதலில் விசாரணை செய்யப்படுவர்.

அதன் பின்னர் சம்பந்தப்பட்ட ராணுவத்தினரும், ஆயுதப் படையினரும் குழுவினால் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவர்.

இரு பகுதியினரும் ஒரே நேரத்தில் விசாரணைக்கு அழைக்கப்பட மாட்டார்கள் எனவும், தனித்தனியாகவே விசாரணை செய்து அவர்களது வாக்கு மூலம் பதிவு செய்யப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை தாக்குதல்கள் தொடர்பாக

...10ம் பக்கம் பார்க்க

பிரதமர் ராஜீவ் கூறுகிறார்:

## பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் ஆனால் காலம் செல்லக்கூடும்

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன ஏற்கனவே அளித்த வாக்குறுதியை மீறமாட்டார் என்றே தாம் நம்புவதாக பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநா

...10ம் பக்கம் பார்க்க

முல்லைத்தீவுப் பகுதியில்

## வயல்களுக்குச் செல்வதற்கு ராணுவ அனுமதி பெற வேண்டும்

(ஒட்டுசுட்டான்)

முள்ளியவளை, தண்ணீரூற்று, கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள விவசாயிகள் தமது வயல்களுக்கு செல்வதற்கு முன்பு தத்தம் அறிமுக அட்டைகளை ஒட்டுசுட்டான், முல்லைத்தீவிலுள்ள பந்தோபஸ்து படையினரின் முகாமிற்குச் சென்று அனுமதி பெற்ற பின்பே தமது வயல்கட்கு செல்லவேண்டியுள்ளது.

இந்த கெடுபிடி காரணமாக விவசாயிகள் வயல்கட்கு செல்ல அஞ்சுகின்றனர். வயல்களுக்கும், காடுகளுக்கும் எவ்

...10ஆம் பக்கம் பார்க்க

சென்னை பத்திரிகையாளர் சந்திப்பில் நெடுமாறன் தகவல்

# யுத்த நிறுத்தப் பெயரில் ராணுவம் பலமடைகின்றது

## பாரதக்குழு நேரில் அனுப்பப்படவேண்டும்

(சென்னை)

இலங்கையில் யுத்த நிறுத்தம் என்ற பெயரில் இராணுவத்தை வலுப்படுத்துவதையே இலங்கை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது என்றும் இது சம்பந்தமாக தாம் தமிழக அனைத்துக் கட்சித் தலைவர்களையும் பிரதமர் ராஜீவ் காந்தியையும் சந்தித்து உண்மை நிலையை விளக்கப் போவதாகவும் இலங்கையின் தமிழ்ப் பகுதிகளுக்கு அண்மையில் விஜயம் செய்த தமிழக காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. பா. நெடுமாறன் சென்னையில் நேற்று நடத்திய பத்திரிகை

...10ம் பக்கம் பார்க்க

இளைஞருக்கு சாப்பாடு, உடுப்பு போதாது; ஒருவர் மனநோயாளி

## பூஸாவிலுள்ள பெண்களை உடன் விடுவிக்குமாறு கண்காணிப்புக் குழுவினர் ஜனாதிபதிக்கு சிபார்சு

பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆறு தமிழ் பெண்கள் மீதான விசாரணையை துரிதப்படுத்தி, அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழு ஜனாதிபதிக்கு சிபார்சு செய்துள்ளது.

பூஸாவுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் விஜயம் செய்த மேற்படி குழு, அதன் அறிக்கையை நேற்று முன்தினம் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தது தெரிந்ததே.

நேற்றைய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால அட்டிகலை, பெண்கள் மீதான விசாரணையை உடன் நடத்தி முடிக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாகத் தெரிவித்தார்.

பூஸா முகாமிலுள்ள இளைஞர்களுக்குப் போதிய உணவு

...10ம் பக்கம் பார்க்க

## ஒரு சடலம் உறவினருக்காக காத்திருக்கிறது

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் மயங்கிய நிலையில் கிடந்த சுமார் ஐம்பது வயது

...10ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழி முகாம் வீதி மூடப்பட்டது

நாவற்குழி முகாம் உள்ள பகுதி நேற்று போக்குவரத்

...10ம் பக்கம் பார்க்க

மூன்றுமுறிப்பில் சம்பவம்

## யாழ். லொறி மறிக்கப்பட்டு சாரதிக்குக் கத்திவெட்டு

(இருபாலை)

யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த திருவரங்கம் என்ற லொறியின் சாரதி வவுனியா மூன்றுமுறிப்பு என்ற இடத்தில் கத்திவெட்டுக்கு இலக்காகி காயங்களு

-10ம் பக்கம் பார்க்க

## ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு பொது மக்கள் உதவி தேவை

(இருபாலை)

யாழ். வைத்தியசாலை இரத்த வங்கியில் அவசரத் தேவைகளுக்கு இரத்தம் இல்லை. இரத்ததானம் செய்வோர் தினமும் அருகி வருவதாலும் அவசர சிகிச்சை

...10ம் பக்கம் பார்க்க

national weekly வாரமலர் விலை: ரூபா இரண்டு

# வரி விளம்பரம்

## மணமகன் தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள குல, 2-ல் செவ்வாய் உள்ள உத்திரட்டாதி நட்சத்திர, A/L சித்தி, கூட்டுறவு உயர்தர பயிற்சி முடித்த சகோதரிக்கு அதே குல மணமகன் தேவை. சொந்தத்தில் தொழில் செய்பவரோ, அரசாங்க கூட்டுத்தாபன ஊழியரோ, வெளிநாட்டில் வேலை பார்ப்பவரோ சாதகக் குறிப்புடனும் வருமான மற்றும் விபரங்களுடனும் விண்ணப்பிக்கலாம். மணமகள் வயது: 28. வீடு வளவு, நகை, பணச் சீதனம் உண்டு. விளம்பர இல. B/814, 'ஈழமுரசு' 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## மணமகள் தேவை

யாழ்ப்பாணம் இந்து வேளாள குல, வெளிநாட்டில் கார் உற்பத்திக் கம்பனி ஒன்றில் 1989-ம் ஆண்டு முடியும் வரை வேலை ஒப்பந்தம் பெற்றுள்ள சுவாதி நட்சத்திர 10-ல் செவ்வாய் உள்ள அழகான சிவந்த இளைஞருக்கு மணமகள் தேவை. இங்கு வந்து திருமணஞ் செய்து அழைத்துச் செல்வார். பெண் அழகாகவும் வீடுவளவு, நகை, பணச் சீதனம் உடையவராகவும், படித்தவராகவும் இருப்பின் விண்ணப்பிக்கலாம், மணமகன் வயது: 32. சாதகக் குறிப்புடன் பிற விபரங்களையும் அனுப்பவும். கடிதங்கள் இரகசியமாக இருக்கும். விளம்பர இல. B/814, 'ஈழமுரசு', 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## சனி, வியாழ மாற்றம்

3.11.1985ல் சனீஸ்வரரும் 23.1.1986ல் வியாழ பகவானும் உங்களுக்கு அளிக்கப் போகும் பலாபலன்களை அறிய ஆசைப்படுகின்றீர்களா? விற்பனையாகின்றது: V. A. சிவராசா, சோதிடர், வேலணை.

## பாட்டிற்கிரங்கி மழை பெய்தது?

(வேலணை)

வேலணை, புளியங்கூடல், சுருவில் போன்ற இடங்களில் மழை பெய்ய வேண்டும் என்பதற்காக ஒரு குழுவினர் நள்ளிரவில் கரகம், காவடி, உடுக்கை, மத்தளம் போன்றவைகளின் ஒலியை எழுப்பி மழைத் தெய்வத்தை வேண்டிப் பாடல்களைப் பாடியும், காவடி, கரகம் ஆடியும் சென்றனர். ஒவ்வொரு வீடுவீடாகச் சென்றும் பாட்டிசைத்துச் சென்றனர். இதன் பலனோ என்னவோ அவர்கள் பாட்டிசைத்துச் சென்ற மறுநாள் தீவுப்பகுதியெங்கும் பெருமழை பெய்ய ஆரம்பித்துள்ளது

## கிணற்றுள் மலம் விஷமிகள் செயல்

(பூநகரி)

பூநகரி தபாற்கந்தோருக்கருகில் பாவனையில் உள்ள நல்லதண்ணீர் எடுக்கும் பொதுக்கிணற்றுள் சில விஷமிகளால் மலம் கொட்டப்பட்டுள்ளது. இரு சாராருக்கிடையே தண்ணீர் அள்ளுவதில் ஏற்பட்ட பிரச்சினையே இதற்குக் காரணமென நம்பப்படுகிறது. இதனால் நூற்றுக்கணக்கான மக்கள் குடிநீருக்காக வேறிடங்களுக்கு அலையும் அவலம் ஏற்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கிராமசேவை உத்தியோகத்தரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிணற்றுக்கும் இதே கதி நேர்ந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

## விற்பனைக்கு

ஏழு மாதம் நிரம்பிய சிறந்த இன ஆண் அல்சேஷன் நாய் விற்பனைக்குண்டு. 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் மனோகரா சினிமா அருகில்)

## தவறிவிட்டது

பி. பாலச்சந்திரன் ஆகிய எனது X 553201446 என்ற இலக்கமுடைய அடையாள அட்டை தவறிவிட்டது. பி. பாலச்சந்திரன் ஆசிரியர், முதலாம் கட்டை ஒழுங்கை, சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி என்ற முகவரிக்கு கண்டெடுத்தவர்கள் அறிவிக்குமாறு வேண்டுகிறேன்.

## ஆயுள்வேத மாத்திரை

(வேலணை)

சாதாரணமாக தலைவலி, தடிமன், காய்ச்சல் போன்ற நோய்களுக்காக பாவிக்கக்கூடிய டிஸ்பிறின், அஸ்பிறின் போன்ற வில்லைகளைப் போல எங்கும் கிடைக்கக் கூடிய விதத்தில் உடன் நிவாரணம் தரக்கூடியதுமான வில்லைகளை தயாரித்து விற்பனை செய்வதற்கு ஆயுள்வேத அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக சீனாவிலிருந்து நிபுணர்களை வரவழைக்கவும் மேற்படி அமைச்சு முடிவு செய்துள்ளது பக்கவிளைவுகள் அற்றதும் முழுவதும் ஆயுள்வேத மருந்துகளை கொண்டதும் நவீன முறையிலுமான இம்மருந்தை மக்கள் பெரிதும் விரும்புவரென ஆயுள்வேத அமைச்சு நம்பிக்கை தெரிவித்துள்ளது.


## அவசர அறிவித்தல்

ஈராக் விசாவுக்காக விண்ணப்பித்திருந்தவர்கள் பெயர்களை சென்ற மாதம் 28ம், 29ம் திகதி பத்திரிகையில் பிரசுரித்திருந்தேன். அந்தப் பட்டியலில் பெயரை பெற்றிருப்பவர்கள் உடனடியாகவே பிரயாணத்தைமேற்கொள்வதற்காக 3ம், 4ம், 5ம், திகதியில் வந்து என்னை நேரடியாகச் சந்திக்கவும். புதியவர்களும் 6-ம் திகதிக்கு முன்பு வந்து பாஸ்போர்ட்டுடன் தொடர்பு கொள்ளவும்

அ. மகேந்திரன்
155, குருசோ வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## ஹோமியோபதி

ஹோமியோபதி டாக்டர்களுக்கும் மாணவர்களுக்கும் அவசியமான வைத்திய நூல்கள் (கவுன்ஸில் பாடத்திட்டம் உட்பட) தமிழில் தயாராகின்றன.

விபரங்களுக்கு:

**Dr. T. PARAMASHIVAM.**
HOMOEOPATHY MEDICAL CLINICS,
60, RASAVINTHOTTAM,
JAFFNA.


## உயிரின வாயுகூட அமைப்பிற்கான கூறுவிலை கோரல்

முல்லைத்தீவிலுள்ள குமுழமுனைக் கிராமத்தில் 2 கன மீற்றர் பரிமானமுள்ள உயிரின வாயுக்கூடம் (BIO-GAS PLANT) அமைப்பதற்கான கூறுவிலைகள் (QUOTATION) இத்தால் கோரப்படுகின்றன. இவ்வுயிரின வாய்வுக்கூடம் அமைப்பதற்கான (இந்திய உற்பத்தி) திணைக்கள அளவு பிரமாணங்களை முல்லைத்தீவு கச்சேரியில், காரியாலய நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். கூறுவிலைகள் 27.11.1985 அன்று அல்லது இத் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அரசாங்க அதிபர், கச்சேரி, முல்லைத்தீவு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உயிரினவாயுக்கூடம் அமைப்பதற்கான கூறுவிலைகள்" என எழுதப்படல் வேண்டும். இந்திய மாதிரியைத் தவிர்ந்த வேறு உயிரின வாய்வுக்கூட அமைப்புக்கான கூறுவிலைகளும் கவனத்துக்கு எடுக்கப்படும்.


1985 ம் ஆண்டு,
நவம்பர் 1ம் திகதி
கச்சேரி,
முல்லைத்தீவு.

க. பொன்னம்பலம்
முல்லைத்தீவு-
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.


## கிளீன்கட்

★ தரமான போட்டோஸ்டட் பிரதிகள்
★ தட்டச்சு எழுத்து வேலைகள்
★ றோணியோ அச்சு வேலைகள்
★ பெண்கள் குழந்தைகளுக்கான ஆடைகள், தையல் வேலைகள்

239, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22823

## பிறந்தநாள் வாழ்த்து

❋ மீசாலை தெற்கு திருச்செல்வம் இராசம்மா தம்பதியின் பிள்ளை லோகவசா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❋ திருநகர் குமாரசாமி இந்திராணி தம்பதியின் மகள் இந்துஷினி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ சுழிபுரம் மேற்கு முத்தையா யோகா தம்பதியின் மகன் கதிரவேல் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். ஸ்ரீ வெங்கடேசன் வீதி மாணிக்கவாசகர் தங்கலட்சுமி தம்பதியின் மகள் ஜிந்துஷா இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ யாழ். சோனகத்தெரு அக்பர்அலி நபீஷா தம்பதியின் மகன் மொஹமட் ஷஜாத் இன்று தனது ஆறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❋ அரியாலை, கனகரத்தினம் வீதி, தேவராஜா கமலேந்திராணி தம்பதியின் மகள் மங்கலமாலா தனது ஐந்தாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

❋ அரியாலை, கனகரத்தினம் வீதி கமலேந்திரன் மணி தம்பதியின் மகள் கமலி தனது ஐந்தாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.


## உங்கள் அபிமானத்திற்குரிய மில்க்வைற் நீல சோப்




புதிய விலை ரூபா. 2/– மட்டுமே.

நுரை வளம் கூடிய மில்க்வைற் நீலசோப்பை வாங்கிப் பாவித்து மேலுறைகளை அனுப்பி மிகச் சிறந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறளை வெட்டி அனுப்பி இல. 119 செய்தி அல்லது காந்தி பொன்மொழிகள் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

—மில்க்வைற்—யாழ்ப்பாணம்.


## அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் சின்னையா வைத்தியலிங்கம்

(பிரபல இலவச விஷகடி வைத்தியர்)


(கற்சிலைமடு, ஒட்டுசுட்டான்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 7-08-1904 | 4-10-1985 |

எமது குடும்பத் தலைவன் எம்மை விட்டு பிரிந்த ஞான்று எமது துக்கத்தில் பங்குகொண்டவர்களுக்கும் பல்வேறு உதவிகளை புரிந்தவர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் 4-11-1985 திங்கட்கிழமை காலை 8 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெற உள்ள அந்தியேட்டி கிரியைகளில் பங்கு கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

கற்சிலைமடு
ஒட்டுசுட்டான்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரக் குழந்தைகள்




# புள்ளி விபரமும் கணக்கு விடுகிறது

பஹாமாஸில் நடைபெற்ற காமன்வெல்த் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா பல புள்ளி விபரங்களைத் தாராளமாக அள்ளி வீசியிருக்கிறார்.

இலங்கையின் சனத்தொகை, தமிழர், சிங்களவர், இஸ்லாமியர்களின் தொகை கடந்த பொதுத் தேர்தலில் வடக்குக் கிழக்கில் கூட்டணியினருக்குக் கிடைத்த வாக்குகளின் விகிதாசாரம், 1982 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமக்குக் கிடைத்த வாக்குகளின் தொகைபற்றியெல்லாம் இங்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

''ஜனாதிபதி தேர்தலில் வடமாகாணத்தில் 73 ஆயிரம் வாக்குகளில் 56 ஆயிரம் தமக்கே கிடைத்ததாகவும், கிழக்கு மாகாணத்தில் 163 ஆயிரம் வாக்குகளில் 144 ஆயிரம் தமக்கே கிடைத்ததாகவும்'' அவர் தெரிவித்துள்ளதைப் படிக்கும்போது, அதிகமான தமிழர்களும் வடக்குக் கிழக்கில் ஜனாதிபதிக்கே வாக்களித்ததான எண்ணமொன்று உருவாகுவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

இவ்வாறான மயக்கம் தரும் வகையில் ஜனாதிபதியின் பேச்சு அமைந்துள்ளது.

ஆனால் உண்மைநிலை என்ன தெரியுமா?

வடமாகாணத்தின் வாக்காளர் தொகை ஆறரை லட்சம். இதில் 73 ஆயிரம் பேர் மட்டுமே வாக்களிப்பில் கலந்து கொண்டனர். கிழக்கு மாகாணத்தின் வாக்காளர் தொகை ஐந்தரை லட்சம். இதில் 144 ஆயிரம் பேர் மட்டுமே வாக்களிப்பில் கலந்து கொண்டனர்.

இந்தக் கணக்கு எப்படித்தான் மறக்கப்பட்டதோ? அல்லது மறைக்கப்பட்டதோ?

★ உக்கிரன்

# பத்திரிகைக் கட்டுரைகள்; எளிமையா? தெளிவா? இவை ஏன்?

'பத்திரிகைகளில் வெளியாகும் கட்டுரைகளில் தெளிவு வேண்டும்' என்ற கருத்துப் பற்றி ஆராய்தலைகளுக்கு முன் இணுவிலிலுள்ள பாடசாலை ஒன்றில் நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர்கள் எழுத்தாளர்களிடையே ஆரோக்கியமானதொரு விவாதம் இடம் பெற்றது. அக்கூட்டத்திலே எளிமை, தெளிவு என்ற இரு சொற்களிடையே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. இன்று இக்கருத்து மேலும் பரவலாகிச் சூடுபிடித்து வருவதை 'ஈழமுரசு' ஞாயிறு இதழ்களில் வெளியாகிய குறிப்புகளும் கட்டுரையும் நிரூபிக்கின்றன.

இணுவிலில் கலாநிதி சபா ஜெயராசாவின் பாராட்டுக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட கருத்துக்களின் சாரம் பின்வருமாறு.

1. கட்டுரைகள் யாவருக்கும் விளங்குமாறு தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

2 எல்லா விடயங்களையும் எளிமையாகச் சொல்லி விடல் இயலாது.

3. பத்திரிகைகளில் வெளியாகும் கலைநுட்பம் வாய்ந்த கட்டுரைகள் எல்லாராலும் வாசிக்கப்படுவதில்லை. அவ்வத்துறைகளில் ஈடுபாடும் அறிவும்உடையவர்களே தத்தமக்கு நாட்டமுடைய சிறப்புக் கட்டுரைகளை வாசிப்பர். எனவே இங்கு எளிமை என்ற பிரச்சினை எழ இடம் இல்லை.

4. தமிழுக்குப் புதிய சொற்கள் பலவற்றை அறிமுகம் செய்ய வேண்டியது அவசியம். இவ்வாறு அறிமுகம் செய்யப்படுகையில் அவை முதலில் கடுமையானவை போலவே தோன்றும். காலப்போக்கில் பழக்கத்தில் வந்தபின் இயல்பாக எல்லார்க்கும் விளங்குவனவாய் விடும். தமிழின் வளத்துக்கும் வளர்ச்சிக்கும் இத்தகைய புதியசொல் அறிமுகம் அவசியம்.

கலாநிதி சபா ஜெயராசாவின் பாராட்டுக் கூட்டத்தில் நான் கூறியது இது; ''இவரின கட்டுரைகள் தமிழுக்குப் பயன்படும் புதுமையும் வழங்கும் அதே வேளையில் கையாளப்படும் உரைநடை இன்னும் தெளிவாக அமைவது விரும்பத்தக்கது''. இந்தக் கூற்றின் அடித்தளத்திலேயே அன்றைய விவாதம் இடம்பெற்றதாலும் இன்று அவ்விவாதத்தின் அடிப்படையே திசைதிருப்பப்படுவது போல எனக்குத் தோன்றுவதாலும் இக்குறிப்பினை நான் எழுத வேண்டியதாயிற்று.

கலாநிதி சபா. ஜெயராசா கல்வி, கல்வி உளவியல் ஆகிய துறைகளில் ஆய்வாளர்; அரசியல் சமூக, இலக்கிய உணர்வு மிக்கவர்; தமது துறைகளிலே தாம் பெற்ற அறிவினையும் அநுபவங்களையும் சமகாலச் சமுதாய நிலைகளோடும் தேவைகளோடும் இணைத்துக் கருத்துக்களைக் கட்டுரை வடிவிலே அவர் தருவதால் அக்கட்டுரைகள் பயன்பாடும் புதுமையும் கொண்டவை என்பது என முடிவு. அவரின கருத்துக்கள் மேலும் தெளிவானமுறையில் தரப்பட்டால் கூடிய பயன்பாடு உடையனவாகலாம் என்ற என விருப்பத்தை நல்லுள்ளத்தோடு குறிப்பிட்டேனேயன்றிக் கண்டிக்கும் நோக்குடன் அன்று.

ஒரு விடயத்தை அவ்விடயம் சார்ந்த துறையில் ஈடுபாடும் புலமையும் வாய்ந்த அறிஞர்க்கென எழுதுவது வேறு. எல்லாரும் எல்லாத்துறைகளிலும் பாண்டித்தியம் உடையவர்களாய் இரார். தமது எல்லைக்குட்பட்ட விடயங்களைத் தீர ஆராய்ந்து, ஆய்வேடுகளாகத் தயாரித்துத் தம் துறைசார்ந்த அவையினர் முன்பு வாசிப்பதும், விவாதிப்பதும் உயர்கல்வித் தொடர்புடையாருக்கு இயல்பே. இத்தகைய ஆய்வேட்டுக் கட்டுரைகள் ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளியாவதும் அவசியமே. உயர் நிலைக் கல்விப்பாட நூல்களாகவும் உசாத்துணை நூல்களாகவும் இத்தகைய ஆய்வுக் கட்டுரைகள் வெளியாகலாம், வெளியாதல் அவசியமுமாகும். இவற்றின் தரமும அவைவும் பயன்பாடும் குறித்த துறை சார்ந்த அறிஞர் குழுவுக்கே சிறப்பாக உரியன என்பதையும் நாம் நினைவிற் கொள்ளல் வேண்டும்.

ஆனால் மனித சமுதாயத்திற்குப் பயன்படல் வேண்டுமென்ற நல்லுணர்வாலோ தமது துறையிலே தாம் பெற்ற தகவல்களைப் பரந்ததொரு வாசகர் கூட்டத்திற்குப் பரிமாறி அவர்களின் அறிவை மேம்படச் செய்தல் வேண்டும் என்ற வேணவாவினாலோ அறிஞர் ஒருவர், பத்திரிகைக்குக் கட்டுரைகளை எழுதும் பொழுது அவற்றைத் தமது சிந்

**சொக்கன்**

தனையிலே படம் போட்டு. தம் நிலையிலிருந்து சற்றே இறங்கி எழுத்தாளர் நிலையில் சுவை, ஒழுங்கு, தெளிவு என்பன அமையும் வகையில் எழுதுதல் அவசியமாகும். அவரின் உள்ளத்து ஒளி அவரின வாக்கினிலே சுடர்விட அவை மக்களின் அறியாமை இருளை ஓட்டுதல் வேண்டும். அப்பொழுது தான் அவரின் ஆக்கங்கள் சமுதாயப் பயன்பாடு மிக்கனவாய் அமையும். இத்தகைய கட்டுரைகள் நீண்டகால ஆய்வுகளின் திரள்பயன் அல்ல என்பதாலேயே, இவற்றை எழுதுபவரின் பொறுப்பு மேலும் அதிகம் ஆகின்றது எனலாம்

கட்டுரைகளிலே கையாளப்படும் சொற்கள் புதியனவாகவே இருத்தல வேண்டும் என்பது முக்கியமன்று. அவை பொருத்தப்பாடு உடையனவா கருத்தைத் தாங்கக் கூடிய ஆற்றல் உடையனவா என்ற நோக்குத்தான் முதன்மைப்படுத்தப்படல் வேண்டும். அப்பொழுதுதான் அந்தச் சொற்கள் கையாள்பவரின் நோக்கத்தினை நிறைவேற்றுவனவாய் மட்டுமின்றி அவரின் பின்னரும் ஆட்சி பெற்று மொழிக்கு வளம் சேர்க்கும்.

''மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்'' என்று அறிவுறுத்திய பாரதி எத்தனையோ புதிய சொல்லாக்கங்களைச் செய்து அவற்றை எமக்கு முதுசொமாக விட்டுச் சென்றுள்ளான் என்பது உண்மையே. ஆனால் அவன் கையாண்ட சில சொற்களும் சொற்றொடர்களும் பயன்பாட்டுத் தகுதியோ ஆட்சியோ பெறாது போய்விட்டன என்பதையும் நாம் மறந்து விடல் ஆகாது. உதாரணமாகச் 'செந்தமிழ் நாடெனும் போதினிலே' எனத் தொடங்கும் அவன் பாட்டில் வரும் 'தந்தையர் நாடு' என்ற சொற்றொடரை எடுத்துக் கொள்வோம். செந்தமிழுக்கு' எதுகையாகக் கையாளப்பட்ட இச் சொற்றொடர் இன்று எவராலும் கையாளப்படுவதில்லை காரணம் 'தாய்நாடு' என்ற சொற்றொடரின பற்றுணர்வும் பெறுமானமும் தமிழ் மக்களையும் அறிஞரையும் அந்த அளவிற்கு ஆட்கொண்டு விட்டன.

என் அளவில் சொற்களை இருவகைகளாகப் பிரித்து நோக்கலாம் என்று கருதுகின்றேன். ஒருவகைச் சொற்களுக்கு மூலச் சொற்கள (RAW WORDS) என்றும் மறுவகைச் சொற்களுக்குச் செப்பனிட்ட சொற்கள் (FINISHED WORDS) என்னும் வசதி நோக்கிப் பெயரிடலாம். சாதாரணமாக வழக்கில் உள்ள சொற்களை மூலச்சொற்கள் என்ற வகையுள் அடக்குவோம். இம்மூலச் சொற்களை அறிவுத்துறை சார்ந்தவர்கள் தமது கருத்துக்களை வெளியிடத் தக்கவாறு செப்பனிட்டுக் கொள்கின்றனர். இவையே கலைச்சொற்கள் எனலாம். இவற்றிலே சொல் குறிக்கும் பொருளின அடிப்படை இயல்பு அமைந்ததா என்பதே கலைச்சொல்லை அமைப்பவரின் முதன்மை நோக்கமாக அமைகின்றது. தமது சொந்த மொழியிலே அவ்வியல்பை வெளிப்படுத்த இயலாது என்ற நிலையிலே பிறமொழிச் சொற்களை இயல்புணர்ந்து கையாள்வதும் அறிஞர்களின் வழக்கமாய் இருந்து வருகின்றது.

ஒரு கட்டத்தின்மேல் இவை அத்துறை சார்ந்தவரின் குழூஉக்குறிகளாய் அமைந்துவிடுகின்றன. பெரும்பாலும் நியமத் தன்மையைப் பெற்று இவை மாற்றங்களுக்கு அடிக்கடி உள்ளாகாமல் வாழ்வு பெறுகின்றன. அறிவு வட்டம் விரிய விரியப் புதிய சொற்கள் குறித்த துறைகளில் வாழ்வு பெறத் தொடங்குவது இயல்பே. எனினும் இக்குழூஉக்குறிகள் ஆளுக்கு ஆள வேறு வேறாகாது ஒருமுகப்பட்டனவாய் இருத்தல் அவசியம். இதனால் மொழி வளம் பெறும் என்பது பொருந்தாது. அறிவுத்துறையே வளர்ச்சி காணும். எனவே செப்பனிடும் பொழுது அதிக கவனம் செலுத்தப்படும் பின் மாறுபாடு கொண்ட சொற்களாக அவை விளங்குவது தவிர்க்க முடியாததாகும்.

உண்மையில் கற்பனை வளமும் உணர்வும் மிக்க ஆக்க இலக்கியகாரர்களே மூலச் சொற்களிலிருந்து தத்தம் போக்கில் சொற்களைச் செப்பனிட்டுப் புதுச் சொல்லாக்கத்தை, சொற்றொடர் ஆக்கத்தினை மேற்கொள்பவராவர். இவர்களின் ஆக்கங்களே மொழியின வளத்திற்கும் வளர்ச்சிக்கும் உறுதுணை புரிகின்றன. தம் கருத்துக்களுக்குத் தெளிவு வேண்டியும் வாசகர் வட்டத்தைக் கருத்திற் கொண்டும் அறிஞர்கள் கலைச்சொற்களை நெகிழ்ச்சிப்படுத்திக் கையாள்கையிலே அவை புதிய சொல்லாக்கங்களாய் அமைவதும் உண்டு. எனினும் 'குழூஉக்குறிகள்' புதிய சொற்கள் அல்ல என்பதும், அவை மொழி வளத்திற்கு ஆக்கம் அளிப்பதில்லை என்பதுவ பெருமளவு ஏற்க வேண்டிய ஒன்றே.

ஒரு குறித்த துறையினரிடையே குழூஉக்குறிகளாகக் கையாளப்படும் சொற்களையும் சொற்றொடர்களையும் பயன் செய்வதாலோ, அன்றது ஆங்கிலத்திலிருந்து நேரடியாக மொழிபெயர்ப்புச் செய்து கொள்வதாலோ கலாநிதி சபா. ஜெயராசா, பேராசிரியர் கா. சிவத்தம்பி முதலிய அறிஞர்களின் எழுத்துக்களின் தெளிவு குறைந்து விடுகின்றது என்பதே எனது வாதம். பின்வரும் உதாரணம் என் கூற்றுக்குச் சான்றாகும்.

...9ஆம் பக்கம் பார்க்க

## வாசகரின் தரமுயர வேண்டும்!

''வாசகர்கள் இலகுவாகப் புரிந்து கொள்ளும் வகையில் கட்டுரைகள் எழுதப்படவேண்டும் என்று சிலர் கூறி வருகிறார்கள். ஏன் இப்படிக் கேட்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. வாசகர்களின் தரத்தைக் குறைத்து நம்மவர்கள் எடைபோடுகிறார்களா என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. சகல கட்டுரைகளையும் வாசித்துப் புரிந்துகொள்ளும் நிலைக்கு வாசகர்கள் தரமுயர வேண்டும். எனவே கட்டுரைகளை எளிமைப்படுத்துங்கள் என்று கேட்கக் கூடாது என்றே நான் கருதுகிறேன்'' – யாழ். நகரில் நடைபெற்ற நூல் விமர்சன அரங்கொன்றில் கலாநிதி ஜே. இருஷ்ணராஜா இவ்வாறு கூறினார்,

# பத்திரிகை நிருபர் புஸ்வால்ட் நகைச்சுவை

அமெரிக்க பத்திரிகை நிருபரான ஆர்ட் புஸ்வாலட் ஒரு சிறந்த நகைச்சுவை எழுத்தாளருமாவர். மிகவும் சிக்கலான விஷயங்களையும் சிரிக்க சிரிக்க எழுதுவதில் இவர் வல்லவர். இவரது எழுத்துக்கு ஒரு மாதிரி இதோ:—விவாகரத்துகள் மலிந்த அமெரிக்காவில் ஒருவர் தம்முடைய ஐம்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். நிருபர்கள் அவரைப் பேட்டி காணுகிறார்கள்.

ஒரு நிருபர்:—உங்கள் நீண்டகால மகிழ்ச்சி நிறைந்த திருமண வாழ்க்கையின் ரகசியம் என்ன?

அந்த மனிதர் சொன்னது: எங்கள் வீட்டில் தகராறுகளே கிடையாது ஏனெனில் சிறு விஷயங்களைப் பற்றிய முடிவுகளை நான் எனது மனைவியிடம் விட்டுவிடுவேன். பெரிய விஷயங்களுக்கு மட்டும் தீர்வு காண்பதுதான் என்வேலை!

சிறிய விஷயங்களா? அவை என்ன? என்றார் நிருபர்.

'நான் என்னென்ன உடை அணிய வேண்டும்? என்ன சாப்பிட வேண்டும்? என்ன வேலை செய்ய வேண்டும்? எந்த நண்பர்களோடு பழக வேண்டும்? எங்கே தூங்க வேண்டும்? எப்பொழுது எழுந்திருக்க வேண்டும்? என்பன போன்ற சிறிய விஷயங்களை எனது மனைவி முடிவு செய்வாள்.

நிருபர் வியப்போடு கேட்டார்:—'இவைகள் எல்லாம் சிறிய விஷயங்களா? அப்படியானால், நீங்கள் முடிவு காண்பதாகச் சொன்னீர்களே. பெரிய விஷயங்கள் அவை என்ன?'

அதுவா? அமெரிக்க ஜனாதிபதியாக யார் யார் வர வேண்டும்? மத்திய கிழக்கு நாடுகளின் பிரச்சினைகள்; அணு ஆயுத உற்பத்தி விவகாரங்கள்; நாணயமாற்றுப் பிரச்சினைகள் இவை போன்றவை.

## உவர்நிலத்தில் விவசாயம்

சோவியத் மத்திய ஆசியக் குடியரசாகிய துர்க்மேனியாவில் விவசாயிகள் உவர் நிலத்தில் விவசாயம் நடத்துவதாக மாஸ்கோ நியூஸ் 'இன்ஃபர்மேஷன்' சஞ்சிகை அறிவித்துள்ளது. லீட்டருக்கு 5—6 கிராமுக்குக் குறைவான உப்புச் சத்து உள்ள மண்ணில் பலவிதமான தாவரங்கள் பயிராக முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். 3 கிராம்வரை உப்புச் சத்து உள்ள தண்ணீரில் பருத்திச்செடி கூட வளரும் என்கின்றனர் அவர்கள். பருத்தி சோளம் முதலியவை பயிராகும் நிலங்களில் ஐந்து ஆண்டுகளாக நடத்தப்பட்ட சோதனையில் சாதாரண நிலங்களில் கிடைக்கும் மகசூலைவிட இநத நிலங்களில் மகசூல் குறையவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

## நண்பா! உன் நினைவாக என் மோதிரம்

● அவாந்தி கதை

அவாந்தியின் நண்பர்களுள் ஒருவனான வணிகன், நீண்ட பிரயாணம் ஒன்றினை மேற்கொள்ளுவதற்கு முன்னர் விடை பெற்றுச் செல்ல வந்திருந்தான். அவாந்தி தங்க மோதிரம்ஒன்றினை அணிந்திருப்பதைக்கண்டான். அதனைப் பெறுவதற்கு உபாயஞ் செய்ய நினைத்தான்.

நண்பன் கூறினான்: அவாந்தி! உன்னை நீண்ட காலத்திற்கு பார்க்காமல் இருந்தால், என்னால் நிம்மதியுடன் வாழ முடியாது நான் வெளியூர்களில் இருக்கும் பொழுது, உன்னைப் பெரிதும் இழந்தவனாக இருப்பேன். நமது நட்பின் நிமித்தம் உன்னுடைய மோதிரத்தை எனக்குத் தந்தால் என்ன. அதனைப் பார்க்கும் பொழுதெல்லாம், உன்னைத் தசை உருவமாகவே பார்ப்பதான உணர்வு ஏற்படும். இதன் மூலம் எனக்குச் சிறந்த மனத் திருப்தி உண்டாகும்.

ஆனால் அவாந்தி தன்னுடைய வாழ்நாளிலே தன்னுடன் வைத்திருந்த ஒரேயொரு மதிப்பு வாய்ந்த பொருள் அந்த மோதிரமே. அதனைக் கொடுக்க அவனுக்கு மனம் இல்லை.

எனவே அவன் பதிலளித்தான். 'கருணை மிக்க உணர்ச்சி வார்த்தைகளுக்கு நான்' மிக மனப்பூர்வமாக நன்றி கூறுகின்றேன், ஆனால் உன்னை நீண்ட காலம் விட்டுப் பிரிந்து என்னாலும் அதிக நாள் நிம்மதியாக வாழமுடியாது கருணைகாட்டி என்னையே மோதிரத்தை வைத்திருக்க விடு. அதனைப் பார்க்கும் பொழுதெல்லாம், என் நண்பன் இதனைக் கேட்டான் என்பதையும், நான் அவனுக்கு கொடுக்கவில்லை என்பதையும் நான் நினைவுபடுத்திப் பார்ப்பேன். இவ்வாறு இது எப்பொழுதும் உன்னை எனக்கு ஞாபகம் ஊட்டிக் கொண்டே இருக்கும்.

## பூவிலே பெரிய பூ இது! சுற்றளவு 100 சென்டி மீட்டர்

உலகிலே பல வகையான பூக்கள் உள்ளன. அவற்றுள்ளே பெரிய பூ சுமாத்திரா தீவிலுள்ள காடுகளில் காணப்படுகின்றது. இதன் பெயர் 'நாப்லேசியா—அரனூல்டி' இதன் சுற்றளவு நூறு சென்ரிமீற்றர் ஆகும். இதற்கு ஒரு சிறு இலை தானும் கிடையாதாம். உலகிலே பெரிய பூவைப்பற்றி அறிந்தோம். இனிச் சிறிய பூவைப் பார்ப்போம். இதுவும் சுமாத்திராவின் காட்டிலே தான் உள்ளது. இதனைப் 'பார்லிப்லோனா' என்பர். இதன் சுற்றளவோ ஒரு மில்லி மீற்றர் தான்.

சிறிய பெரிய பூக்களைப் போல உயரமான பூவும் இருக்கின்றது. இது கூட சுமாத்திராவிலே தான் உள்ளது. இதன் பெயர் 'அமோர்போபாலஸ்' ஆகும். இதன் உயரம் ஒன்பது அடியாகும். ஆனால் இதற்குக் கிட்டப் போக முடியாது. ஏனென்றால் இது சகிக்க முடியாத துர்நாற்றம் கொண்டதாம். இவை எல்லாமே சுமாத்திராக்காட்டில் காணப்படுவதால் இங்குள்ள காடுகளில் பூக்கள் நிறைய உண்டென ஊகிக்கலாம்.

– தவபாலன்

# தோழர் ஜீவாவின் வாழ்வில் ஒரு நாள்

ஓர் உண்மையான கம்யூனிஸ்ட் என்று உலகம் சுட்டிக்கட்ட உதாரணமாக விளங்கியவர் 'தோழர் ஜீவா' என்று அழைக்கப்பட்ட ப. ஜீவானந்தம.

1963ம் ஆண்டில் அவர் 'ஜனசக்தி' இதழில் பணியாற்றிக் கொண்டிருந்தார். ஒரு நாள் இவரைத் தேடி இரண்டு பெண்கள் வந்தனர். அறைக்குள் அவர்கள் நுழைந்ததும, "என்னம்மா வேண்டும் உங்களுக்கு" என்றார் ஜீவா. "உங்களைப் பார்க்கத்தான் வந்தோம்", என்றாள் ஒரு பெண். மற்றவள் பேசாமல் இருந்தாள். அவளை நோக்கிஜீவா, "நீ யாரம்மா?" என்று அமைதியாகக் கேட்டார்.

அவள்பதில் கூறவில்லை. முதலில் பேசியபெண்ணே "நாங்கள் ஆசிரியப் பயிற்சி பெற்ற மாணவிகள்..." என்றாள். மௌனமாக இருந்த பெண்ணைப் பார்த்து, "நீ யாரம்மா?", என்று கேட்டார ஜீவா.

கண்களில் நீர் தளும்ப, அவள் ஒரு துண்டுக் காகிதத்தை எடுதது நீட்டினாள்... அதில்-

"எனது தாத்தாவின் பெயர் -குலசேகரதாஸ், அன்னையின் பெயர்- கண்ணம்மா: உங்கள் மகள் நான்..."

திகைத்தார் ஜீவா, உணர்ச்சிவசப்பட்டு அதே காகிதத்தில் "என்மகள்" என்று எழுதி அந்தப் பெண்ணிடம் திருபபிக் கொடுத்தார்.

பதினேழு ஆண்டுகள் தந்தையைக் காணாமல் துண்டுக் காகிதம் கொடுத்துத் தன்னை அறிமுகம் செய்து கொண்ட அந்தப் பெண்ணின் பெயர் குமுதா. ஜீவாவின் முதல் மனைவிக்குப் பிறந்தவள். பிறந்த சில நாட்களிலேயே தாயைப் பறிகொடுத்தவள். அவளைப் பார்க்காத பதினேழு ஆண்டுகளில் ஜீவா, நாடு கடத்தப்பட்டு, சிறைப்பட்டு, தலைமறைவாகி.. கட்சிப்பணியிலும், பொதுப்பணியிலும், ஈடுபட்டு.. அப்போதுதான் சந்தித்தார்.

அவளை நோக்கி, "நீ என் இறுதிக் காலம்வரை என்னுடன் பணியாற்றுவாயா?" என்று கேட்டு, அவளையும் தம்பணியில் ஈடுபடுத்தினார்.

ஆதாரம் கே. பாலதண்டாயுதம் எழுதிய 'ஜீவாவின் வாழ்க்கை வரலாறு'

## சர்ச்சிலின் கடும் பயத்தினால் அமரிக்கு அமைச்சர் பதவி

சர்ச்சில் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் குளிக்கப் போனார். நீச்சல் குளத்தின் விளிம்பில் ஒரு மாணவர் நின்று கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

சர்ச்சில் அவரைத் தண்ணீரில் தள்ளி விட்டார். தள்ளும் பொழுதே அம்மாணவனின் அரையில் இருந்த துவாயைப் பிடுங்கி, அவனை நிர்வாணமாக்கியும் விட்டார். இதனைக் கண்டு சிரிக்க வேண்டிய மற்ற மாணவர்கள் பயந்தனர்.

சர்ச்சிலைப் பார்த்து 'டேய் இன்றோடு தொலைந்தாய், அவன் யார் தெரியுமா? அமரி சிறந்த கால் பந்தாட்டவீரன் இப்பள்ளியிலேயே அவன் பெரிய பயில்வான். கரைக்கு வந்ததும் உன்னை அப்பளம் ஆக்குவான் பார் என்றனர்.

அவ்வளவு தான் சர்ச்சிலுக்கு தொடை நடுங்க ஆரம்பித்து விட்டது. அமரி கரை ஏறி வந்ததும் ஏதோ உளறிக்கொட்டி கிளறி மூடி அவனை சிரிக்க வைத்து விட்டான் சர்ச்சில். அமரியின் கோபம் பறந்து விட்டது. சர்ச்சிலின் முதுகில் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தான்.

பிற்காலத்தில் சர்ச்சில் இங்கிலாந்தின் பிரதமராக வந்த பொழுது அந்த அமரிக்கு தமது மந்திரிசபையில் இடம் கொடுத்து மந்திரியாக்கினார்.

## இந்த மௌனம் சம்மதமன்று!

✻ கவிஞர் வைரமுத்து ✻

என் பிரிய எதிரிகளே
உங்களை
மன்னிப்பதற்குப்
பதிலாய் நான்
மௌனம் அனுஷ்டிக்கிறேன்
உங்கள் முகவரியை
நீங்கள் ஏன் - என்
முதுகில் எழுதிவிட்டு
ஒளிக்கிறீர்கள்...?
பொன்னாடையையும்
சவத்துணியையும்
ஒரே தறியில்
நெய்யத் தெரிந்த
நெசவாளிகளா நீங்கள்?
நெஞ்சில்
முட்செடிகளை
வைத்துக் கொண்டு
நாக்கில் மட்டும்எப்படி
நந்தவனம் வளர்க்கிறீர்கள்
உங்கள் பேனாவுக்குப்
பூட்டுப் போட்டுவிட்டு
சாவியை எங்கோ
தொலைத்து விட்டீர்கள்
நஷ்டம இல்லை; அது —
பெரும்பாலும்எழுதியது
பிள்ளையார்சுழிதானே?
பிரிய எதிரிகளே!
என் பேனாவின்
கழுத்தை
திருகிவிட தீர்மானமா
எச்சில் துப்பி —என்
தீயை அணைத்துவிடத்
திட்டமா?
என்னசெய்வீர்கள்
இசையும் கவிதையும்
இல்லாத தேசத்திற்கா
என்னை நாடு
கடத்திவிட முடியும்
வாயு மண்டலத்தில்
எனக்கான காற்றைக்
களவாடி விடவா
முடியும்? என்னைப்
புதைத்தாலும்— நான்
முளைத்து விடுவேன்!
என்னை எரித்தாலும்
ஃபீனிக்ஸ் பறவையைப் போல்
உயிர்த்து விடுவேன்!
சருகுகளின் சலசலப்பிற்கு
ஆணிவேர் பதில்சொல்லாது
என் எழுத்துக்கு
மரணமில்லை!
மரணத்தைப்போலவே
என் எழுத்தும் நிலையானது
என் வானம் தூசு
தொடமுடியாத தூரம்!
என் கவிதை
என் தாய் மொழிக்கு ஆடை
சமூகத்தின்
சம்மதத்தோடு
கர்வமாயிருக்கிறேன்!
ஒவ்வோர் இருதயத்திலும்
மௌனமாய் மழை பொழிவேன்!
என் எழுத்துக்கள்
உழைக்கும் மக்களின்
உண்டியல்கள்
அவர்கள் அதைப்
பத்திரமாகப்
பாதுகாப்பார்கள்
பிரிய எதிரிகளே
ஒரு துறவியின்
தபோவனம் போல்
மௌனமாய் இருக்கிறேன்
ஆனால்-இந்த மௌனம்
சம்மதத்தின்
சைகை அன்று!

# ஒரு கடமை கைலஞ்சம் கேட்கிறது

ஆதிலட்சுமி இராசையா

ஓலைப்பாயில் முடங்கிக் கொண்டு படுத்திருந்தார் சின்னத்தம்பி வழமையாக இவ்வளவு நேரம் பாயில் அவர் படுத்திருப்பதில்லை

'அப்பு...... அப்பு...... நல்லா விடிஞ்சு போச்சுது எழும்பனை' அவருடைய ஒரே மகள் பார்வதி கூப்பிட்டதும் எழும்பிப் பாயில அமர்ந்தார். தேகமெல்லாம் குளிரால் நடுங்கியது அவருக்கு.

'என்னணை கால் உந்தளவுக்கு வீங்கிப் போச்சுது... உடனேயே ஊசி போடச் சொன்னனான்... நீ கேக்கேலை...' தேனீர்க் கிண்ணத்தை பக்கத்தில் வைத்துவிட்டுப் போனாள் பார்வதி.

'எந்தளவு பெரிய காயமெல்லாம் இந்தச் சன்னிறது கூ...ன்னை மாறினது... இப்பதான் கண்டறியாத ஊசியும் உலக்கையும்..' வயது போயும் அவருடைய பழமை போற்றும் குணம் மாறவேயில்லை.

இப்போது எழுபது வயதாகியும் இதுவரையும் ஒரு தடவை கூட உடம்பு சரியில்லை என்று பாயில் படுத்ததோ அல்லது வைத்தியசாலை அணுகியோ அவருக்குத் தெரியாது. அவருடைய கட்டுப்பாடான உணவு முறையும், கட்டுப்பாடான வாழ்க்கை முறையும் தான் இதற்கு காரணம். இவை இந்த முறைகள் சில இளவயதிலேயே முதுமைத் தோற்றத்தை கொண்டிருப்பதைக் கண்டு சின்னத்தம்பி மிகவும் மனங்கலங்குவதுண்டு.

'உதிலை போய் காலுக்கு ஊசி போட்டுக்கொண்டு வேலைக்குப் பேனை அப்பு...' என்றாள் பார்வதி காலின் காயம் அதிகமாக வலித்தது

கால்முகம் கழுவிக்கொண்டு வைத்திய சாலையை நோக்கிப் பயணமானார் சின்னத்தம்பி.

"இலவச மருத்துவ மனை" என்ற பெயர்ப்பலகையைத் தாங்கிக் கொண்டு கம்பீரமாக நின்றது அந்தக் கட்டடம்.

வெளியே நின்று பார்ப்பவர்களுக்கு அழகிய ஒரு வீடு போலத் தெரியும் அந்தக் கட்டடம் உள்ளே செல்லும்போது தான் மருத்துவமனை என்று பலருக்கு தெரியும்.

ஐந்து விரல்கள் உட்பட பாதம் முழுவதும் வீங்கிப் பளபளத்துக் கொண்டிருக்க கையில் ஒரு சோடாப் போத்திலுடன் காலை நொண்டியவாறு உள்ளே நுழைந்தார் சின்னத்தம்பி.

அவ்வளவாகக் கூட்டம் இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிலர் அமர்ந்திருந்தார்கள். பெற்றோரின் கால்களில் துள்ளித்தவழும் இரு குழந்தைகளைக் கொண்ட குடும்பக் கட்டுப்பாட்டுப் போஸ்டரை ஒரு சிறுவன் எழுத்துக் கூட்டி வாசித்துக் கொண்டிருந்தான். இன்னும் சில ஆங்கில அறிவிப்புகள் சுவரில் தொங்கிக் கொண்டிருந்தன.

வாயிலிருந்த பொயிலைச் சுருட்டை ஒருதடவை உறுஞ்சி எறிந்த பின் விறாந்தையில் போடப்பட்டிருந்த மரவாங்கில் வந்தமர்ந்தார் சின்னத்தம்பி.

அவருக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது எண்ணிறால் பதிதப்போ கூட இல்லாத இடத்தில் எப்பிடி இருபது இலக்கமும் போனது?

'எல்லாரும் வெள்ளணவே வந்து நம்பர் எடுத்துக்கொண்டு போயிடுவினம்... டாக்குத்தர் வந்துவிட்டார் எண்டால்தான் வருவினம்...'

உச்... உச்... உச்... 'வலியெடுத்த காலைத் தடவிக் கொண்டார் அவர்.

இடுப்பில் இரண்டு வயதுக் குழந்தை ஒன்றையும், வயிற்றில் இன்னொன்றையும் சுமந்து கொண்டு உள்ளே வந்த ஒரு இளம் பெண் சின்னத்தம்பிக் அருகே அமர்ந்தாள்.

'இந்த அப்பு பிள்ளை பிடிக்கிறவரடா... பிடிச்சுக் கொண்டு போயிடும்...சும்மா இரு 'சின்னத்தம்பியின் சோடாப்போத்தலை எடுக்க முயன்ற குழந்தையைத் தாய் மிரட்டினாள்.

கிழவருக்கு சிரிப்பு வந்தது சிரிக்க விடாமல் கால் வலித்தது.

'என்னப்பு காலிலை?...' பக்கத்திலிருந்த பெண் மனம் பொறுக்காமல் அவரிடம் கேட்டாள்.


அறிமுகமில்லாத ஒருத்தி தன்னை அக்கறையோடு விசாரித்ததும் ஒரேயடியாகக் குளிர்ந்து போனார் அவர்.

'மம்பட்டி விழுந்திட்டுது பிள்ளை... நான் உதென்னசெய்யப் போகுதெண்டு பேசாமல் விட்டிட்டன்... இப்ப பெரிசா விட்டுது... தன் காலைப் பார்த்தார் அவர்.

'மம்பட்டி வெட்டினதோ' என்று வினவிய அந்தப் பெண் பிறகு, 'அதுக்கு ஏற்பூசி போட வேணும்... பெரியாஸ்பத்திரிக்கு போகாதையுங்க ..' என்றாள்.

சின்னத்தம்பி அவசரமாகத் தலையசைத்தார் 'பெரியாஸ்பத்திரிக்கு போய்வர ஒரு நாள் வேணும்... அதோடை பின்னை இப்ப இருக்கிற நிலைமையிலை ஏதாவது ஒரு அவலம் எண்டால் என்ன செய்யிறது? அவங்கள் வயதைப் பார்க்கிறாங்களோ ...... ஏதோ அம்பிறவையைச் சரிக்கட்டுகிறாங்கள் எல்லே...'

கால் விரல்கள் விண் விண்ணென்று வலித்தன. இடது கையால் விரல்களைத் தடவியபடி 'டாக்குத்தர் வந்திட்டாரோ மோனை?' என்றார் பக்கத்திலிருந்த சிறுவனிடம்.



'ஓம்... உனக்கு 'எத்தனையாம் நம்பர்?...' சிறுவன் கேட்டான். அப்போதுதான 'நம்பர்' எடுக்க வேண்டும் என்று தெரிந்தது சின்னத்தம்பிக்கு. எழும்பிப் போய் ஜன்னலுக்குள் கையை விட்டு நம்பரத்துண்டு வாங்கிக் கொண்டார் கலர்ப் பென்சிலால் எழுதிய இலக்கம் மங்கலாகத் தெரிந்தது.

'உனக்கு இருவத்தொராம் நம்பரணை அப்பு...'

அந்தப் பெண் சிரித்தாள். இப்ப ரவுணுக்குப் போறவர்கள் எல்லா ஒட்டப்பந்தயத்துக்கு தயாராகத் தான் செல்கிறார்கள் எந்த நேரத்திலும் எங்கேயும் எதுவும் நடக்கலாம்... தமிழ் மக்களின் தலைவிதிகள் திடீர் திடீரென நிர்ணயிக்கப்படுகின்றன

இவ்வளவு நேரமும் ஏதோ அலுவலில் மூழ்கியிருந்த டாக்டர் முன்னாலிருந்த நீட்டுக் கொப்பிகளைப் பிரித்து வைத்துக் கொண்டு 'ஒன்று...' என்று குரல் கொடுத்தார்.

நடுத்தரவயதுப் பெண் தனது கைக்குழந்தையோடு டாக்டரின் அறைக்குள் நுழைய... இரண்டு சிறுவர்களும் நுழைய முயன்றார்கள், டாக்டர் முறைத்திருக்க வேண்டும் பின்வாங்கி வந்து வாங்கில் அமர்ந்து கொண்டார்கள்.

உள்ளே குழந்தைப்பிள்ளை வீறிட்டு அலறியது. அந்தக்குரல கிழவரின் நெஞ்சை ஊடுருவி வழிகளை நிரப்பியது.

'ஊசி போடுறார் போல அதுதான பிள்ளை அழுது' தனக்குள் தானே கூறிக்கொண்டு, தோளிலிருந்த துவாய் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார்

சிறிது நேரத்தில் மூக்கில் சிலுவை போட்டமாதிரி 'பிளாஸ்டர்' ஒட்டிய அழுகின்ற குழந்தையை அரவணைத்தபடி வெளியே வந்தது முதலாம் நம்பர்

'இஞ்சாடா நல்ல வடிவான குழந்தை.' இரண்டு சிறுவர்களினதும் பக்கமாகத் திரும்பினார் சின்னத்தம்பி. குண்டுக் குழந்தை ஒன்றின் நெஞ்சளவு புகைப்படம். பால்மா விளம்பரத்துக்காகத் தொங்கியது. பற்கள் கூட முளைக்கவில்லை. அள்ளி எடுக்கவேண்டும் போல் ஆவலாக இருந்தது.

இரண்டு... மூன்று... நான்கு...

டாக்டரின் குரல் வளர்ந்து கொண்டே போனது

'சாப்பாட்டு நேரமாகுது...... இனி ஒருதருக்கும் நம்பர் குடாதேம் யோகராசா...' இடையே வெளியிலும் குரல் கொடுத்துவிட்டு தன் வேலையைத் தொடர்கிறார் டாக்டர்.

சின்னத்தம்பி தன் காயத்துக்கு கட்டியிருந்த துணியினூடாக இலையான்கள் அவரது புண்ணைத் துளைத்தன. அதே இலையான்கள் மீண்டும் அவரது முகத்தில் உட்கார முயன்றதை அவ்வப்போது கையால் ஒதுக்கிவிட்டு நெளிந்தார் அவர். இரண்டு மூன்று தடவை நீளமான கொட்டாவிகூட வந்துவிட்டது அவருக்கு.

நீண்ட நேரம் கழித்து 'இருபத்தொன்று' என்றார் டாக்டர்.

சோடாப் போத்திலைக் கையில் எடுத்துக்கொண்டு உள்ளே போனார் அவர். முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க அந்தக் கம்பீரமான டாக்டர் இரண்டு விரலால் தன் கண்ணாடியைச் சரி செய்துவிட்டு நிமிர்ந்து பார்த்தார்.

'மம்பட்டி விழுந்திட்டதய்யா ஊசி ஒன்று போடவேணும்... நான் பேசாமல் இருந்திட்டன்...' டாக்டர் தொழில் மீதிருந்த அளவுக்கதிகமான பக்தியால் தன் ஐம்புலன்களையும் குறுக்கி மெதுவாகக் கூறிவிட்டு, காயத்தின் மீது சுற்றப்பட்டிருந்த துணியை அவிழ்த்தார் சின்னத்தம்பி.

'ஊசி போடவேணுமோ இல்லையோ என்று எனக்குத் தெரியும்... நீங்கள் சொல்லத் தேவையில்லை காலை இப்பிடி வையுமன்' கோபாப்பம் 'டாக்டர் கோபிக்கிறார் என்பதை குரலில் இருந்து மட்டுப்படுத்த முடியவில்லை டாக்டர் அவரது காலை அழுத்திப் பார்த்தார்.

'இன்னுங் கொஞ்ச நாளைக்கு வைச்சிருந்திட்டு வந்திருந்தால நல்லாயிருக்கும்... வயதுபோன காலத்திலை ஏனப்பா இப்பிடி மனிசரை உலைக்கிறியள்...' இப்போது உண்மையாகவே டாக்டர் தன்னைத் திட்டுகிறார் என்பது அவருக்குப் புரிந்தது

கடவுளுக்கு அடுத்தபடியாக ஒரு டாக்டர்தான் வணக்கத்துக்குரியவர். மக்களுக்கு மறுபிறவி வழங்கும் டாக்டர்களும், பிறர் நலம் பேணும் தாதிகளும் போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களின் தொண்டு நாட்டுக்கு அளப்பரியது. ஆனால் இந்த டாக்டரைப் போன்ற ஒருசிலர் அந்தப் புனிதமான சேவையையே மாசுபடுத்தி விடுகிறார்கள். வெறும் மருந்தால் குணமாகாத எத்தனையோ பிணிகள் டாக்டர்களினதும், தாதிகளினதும் அன்பான வார்த்தைகளால் குணமாகியிருக்கின்றன. இதை

...9ஆம் பக்கம் பார்க்க

# இவ்வாரக் கதையமுதம்

# பெற்றோர்களே! உங்களை இந்துமதம் அழைக்கிறது

இன்றைய பெற்றோர்கள் எல்லாம் பல வருஷங்களுக்கு முன்பு மாணவர்களாய், இளைஞர்களாய் இருந்து வந்தவர்களே. அந்தக்காலத்தில் இன்றைய பெற்றோர்களான உங்களை உங்களுடைய தாய் தந்தையர்கள் எவ்வளவு பொறுப்புடனும், பொறுமையுடனும், தர்மசிந்தனையுடனும், கடவுள் பக்தியுடனும், தியாக உணர்வுடனும், நமது கலாச்சார பண்பாடுகளுடனும் ஆளாக்கினார்கள் என்பதை நீங்கள் இப்பொழுது நினைவு கொள்ளவேண்டும்.

தற்பொழுது உங்களுடைய குழந்தைகளிடம் பெற்றோர்களாகிய நீங்கள் உங்களுக்குச் செய்தவைகளில் சிறிது அம்சமாவது செய்கிறீர்களா என்று நினைத்துப் பார்க்க வேண்டும். நீங்கள் குழந்தைகளாய் இருந்த காலமும், தற்போது குழந்தைகள் காலமும் நிறைய வருஷங்கள் கழிந்து புதிய சூழ்நிலை உருவாகியிருக்கும். ஆனாலும் குழந்தைகளை வளர்க்கும் விதம், மாணவர்களை பழக்கும் விதம் இளைஞர்களிடம் நடந்துகொள்ள வேண்டியமுறை இவைகளை நாம் ஒதுக்கிவிட்டமுடியாது. இன்றைய இளைஞர்கள் தான் சிறிது காலத்திற்குப் பிறகு பெற்றோர்களாவார்கள். அப்பொழுது அவர்களுடைய வாழ்க்கையிலும் அவர்களால் நம்முடைய வாழ்க்கையிலும் விரிசல் ஏற்படாமல் இப்பொழுது முதலே பார்த்துக் கொண்டால்தான் நலமாக இருக்கும்.

வாழைமரமானது எப்படி தலைமுறை தலைமுறையாய் தன்னுடைய இனத்தை வளர்த்துக் கொண்டு வருகிறதோ அதுபோல் நம்முடைய குழந்தைகளையும் நாம் வழையடி வாழையாக நல்லமுறையில் வளர்க்க வேண்டும். நம் வாழ்க்கை முறையைப் பார்த்துத்தான் நம் குழந்தைகள் வாழ்க்கையை நடத்துவார்கள். பெற்றோர்களே அதற்குமீறி இருந்துவிட்டால், நம்முடைய மாணவர்களின் வாழ்க்கையைப் பற்றி கேட்கவே வேண்டாம் என்ற நிலை வந்து விடும்.

வெளி தேசங்களில் இப்படிப் பட்ட சுதந்திரமாக இருக்கும் பெற்றோர்கள் தான் தங்களுடைய பையன்களிடம் தாங்கள் வாழ்க்கையை நடத்த முடியாமல் முதியோர் இல்லத்தில் வசிக்கிறார்கள். அந்த நிலை இப்பொழுது நம்முடைய நாட்டிலும் தொடங்கிவிட்டது. இந்த நிலை தொடர்ந்து வராமல் இப்பொழுதே பெற்றோர்கள் தடுத்து நிறுத்துவதற்கு நல்ல முயற்சிகள் எடுத்தால் அதாவது குழந்தைகளை நல்ல முறையில் பாதுகாப்போடு, பண்போடு வளர்த்தால் பெற்றோர்களாகிய நாம் முதியோர் இல்லத்திற்குச் செல்லவேண்டிய சூழ்நிலை வராது என்பதை நினைவு கொள்ளவேண்டும். நம்முடைய குழந்தைகளை உடல் தூய்மை, உடைத் தூய்மை, உள்ளத் தூய்மை இவைகளெல்லாம் உள்ளவர்களாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். இதைத்தான் தமிழில் 'கந்தலானாலும் கசக்கிக் கட்டு' என்று சொன்னார்கள். ஆனால் நாகரிகம் என்ற பெயரால் பலவித வண்ணத் துணிகளையும் பலவித பெயர் பொறித்த துணிகளையும் அணிவிப்பதில் மகிழ்ந்து போனால் இந்தத் துணிகளில் எழுதப்பட்ட எழுத்துக்களின் நிலைதான் வாழ்க்கையில் நிலைத்து நிற்குமே தவிர துணிகூட எஞ்சி நிற்காது. நாகரிகத்தின் இந்த செயலால் இதுபோன்ற ஆடை

...8ஆம் பக்கம் பார்க்க

# இஸ்லாமிய பண்பாட்டினை இலக்கியத்தில் வடிக்கும் அ. ஸ. அப்துஸ்ஸமது

மட்டக்களப்பிலிருந்து 'மலர்' என்னும் இலக்கிய சஞ்சிகை வெளியாகி வந்த காலகட்டத்திலேயே அச் சஞ்சிகை மூலம் முஸ்லிம் எழுத்தாளர்களில் மூத்தவரான அ. ஸ. அப்துஸ்ஸமது எனக்கு அறிமுகமானார். 1970,தை மலரில் இவரது வர்ணபேதம் என்ற சிறுகதை பிரசுரமாகியிருந்தது இக்கதையில் ஒவ்வோர் உணர்ச்சிக்கும் ஒவ்வோர் நிறம் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்பு – நீலம்; அபாயம் – சிவப்பு; சபலம் – மஞ்சள்; துக்கம் – கறுப்பு; கதை மாந்தர்கள் அனுபவிக்கும் உணர்ச்சி பேதங்கள் இந் நிறங்களால் குறிக்கப்பட்டிருந்தன; மலரில் இடம்பெற்ற கதைகள் பற்றிய விமர்சனங்களும் மலரில் வெளியிடப்பட்டன. சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. 'வர்ண பேதம்' என்ற கதைக்கு ஜனாப் இஸ்ஸதீன் எழுதிய கருத்தழுத்தமான விமர்சனத்திற்கு மலர் பரிசளித்திருந்தது. இவ்விமர்சனப் பார்வையில் ஏற்பட்ட மயக்கம் ஒன்றினை அ. ஸ. அ அவர்கள் தெளிவுபடுத்தும் நோக்கில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். எனது உள்ளத்தைத் தொட்ட கதையும் அக்கதை தொடர்பான சர்ச்சையில் அ. ஸ. அ எழுதிய கட்டுரையும் இவ்வெழுத்தாளரையும் அவரது படைப்புக்களையும் அறியத் தூண்டுகோலாக அமைந்தது.

## மதியும் பிறையும்

தற்போது அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகப் பணிபுரியும் அ. ஸ. அ, ஐம்பதுகளிலேயே எழுதத் தொடங்கிவிட்டார். கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகச் சலியாது எழுதி வருகின்றார். எழுத்தாளர்கள் ஆசிரிய கலாசாலைகளை ஆக்கிரமிக்கிறார்கள் என்னும் குற்றச் சாட்டிற்கு அ. ஸ. அ வும் ஒரு உதாரணம். மட்டக்களப்புஆசிரியகலாசாலை விரிவுரையாளராகத் திகழும் திமிலைத்துமிலன், தலவாக்கொல்லை ஆசிரிய கலாசாலையில் தமிழ்விரிவுரையாளராவும் அதிபராகவும் பணிபுரியும் காரை செ. சுந்தரம்பிள்ளை, கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகப் பணிபுரியும் இக்கட்டுரை ஆசிரியர் 'குறமகள்' ஆகியோரை மனத்துல் வைத்துக்கொண்டுதான் இக்குற்றச்சாட்டு வந்திருக்கவேண்டும்.

1955 ஆம் ஆண்டளவில் ஈழகேசரிப் பத்திரிகையில் 'ஆடு கொடியானேன்' என்ற கவிதையும் அதைத் தொடர்ந்து இஸ்லாமிய இலக்கியமான சீறாப்புராணம் பற்றிய இரசனைக் குறிப்புத் தொடரையும் அ. ஸ. அ. எழுதி வந்தார். ஈழகேசரியில் வெளியான 'பாத்திமாவின் நுதல் அழகு' என்னும் கட்டுரை இந்தியாவில் 'மணிவிளக்கில்' மறுபிரசுரஞ் செய்யப்பட்டது, 1957இல் 'சீறா இன்பம்' என்னும் கட்டுரைத் தொகுப்பு இலக்கியப் பண்ணைப் பிரசுரமாக வெளிவந்தது.

கவிதை, சிறுகதை, நாவல், கட்டுரை, பாடநூல் ஆகிய பல்வேறு துறைகளில் இவர் தனது கைவண்ணத்தைக் காட்டியுள்ளார். இஸ்லாமிய சமய பண்பாட்டம்சங்களை அறிமுகப்படுத்தும் இவரது கட்டுரைகளே இந்தியாவில் இவரைப் பிரபலப்படுத்தின. சீறா இன்பத்தைத் தொடர்ந்து 1959 இல் சென்னை யூனிவேர்ஸல் பப்ளிஷேர்ஸ் 'சுவைமான பக்கீஸ்' என்னும் நூலை வெளியிட்டனர். இஸ்லாமிய இலக்கிய நோக்கு, நபிமணி, கவிநயம் என்பவை இவரது விமர்சன நயப்பாற்றல்களை வெளியிடும் நூல்களாகும். பொருள் வருவாய் கருதி மட்டுமன்றித் தமது சமூகத்திற்கு ஆற்றும் தொண்டாகவே இவர் எழுதி வெளியிட்ட பாடநூல்களைக் கருதுகின்றார். 1959 - 66 காலப்பகுதியில் இலக்கியப் பொய்கை என்னும் தொடரில் மூன்று நூல்களும் 1968 இல் 'தமிழ் இலக்கியம் விளக்கத்துணை' நூலும் 1984 இல் 'தமிழ் இலக்கிய வினாவிடை' யும் வெளியாகின.

புனைகதைத் துறையில் இவர் கணிசமான பங்களிப்பினைச் செய்துள்ளார். இவர் எழுதிய 'எனக்கு வயது பதின்மூன்று, 1977 இற்குரிய சாகித்திய மண்டலப் பரிசினைப்பெற்றது. 27 இஸ்லாமிய எழுத்தாளர்களின் சிறுகதைகள் அடங்கிய தொகுப்பொன்றினைப் 'பிறைப்பூக்கள்' (1979) என்னும் தலைப்பிட்டு வெளியிட்டார். இவரது 'பனிமலர்' வீரகேசரி பிரதேச நாவல் போட்டியில் மட்டக்களப்புப் பிரதேசத்திற்குரிய பரிசைப் பெற்றது. 1982 இல் வீரகேசரிப் பிரசுரமாக வெளிவந்தது. 1983 இல் கல்கினைத் தமிழ் மன்றம் இவரது 'கனவுப்பூக்கள்' நாவலை வெளியிட்டது. முற்றத்து மல்லிகை (1964) ஈழத்து முஸ்லிம்களின் கவிதைகளடங்கிய தொகுப்பு 'பிறைப் பூக்கள்' இவரது இன்னொரு சிறுகதைத் தொகுதியாகும். 1981 இல் அ. ஸ. அ. வின் 'கண்ணீர்ப் புஷ்பங்கள்' நாவல் தினகரனில் வெளியாகியது. இலங்கை வானொலியில் 'இலக்கிய மஞ்சரி' என்னும் நிகழ்ச்சியைச் சிலகாலம் வெற்றிகரமாக நடத்திவந்தார்.

## மூஸ்லிமணி

1950 ஆம் ஆண்டு நூர்ஜகான்' என்னும் சிறுகதை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர் கிழக்கிலங்கையில் தலைசிறந்த படைப்பாளிகளில் ஒருவராகத் திகழ்கின்றார். பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் பல்கலைக் கழகத்தின் கலைமாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார். அக்கரைப்பற்றில் வசித்து வருகிறார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கிளையாகத் திகழும் மட்டக்களப்புத் தெற்கு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவராகத் திகழ்ந்த அ. ஸ. அ. 1963 இல் அறிஞர் சித்திலெப்பைக்குப் பெருவிழா எடுத்தார். அக்கரைப்பற்றில்எடுக்க பட்ட இவ்விழாவிற்கு அதில இலங்கையிலிருந்தும் அறிஞர்கள் பங்குபற்றினர். முற்போக்கு அணியுடன் சில நோக்கங்களுக்காகத் தன்னைப் பிணைத்துக் கொண்டாலும் இவரது படைப்புக்கள் அவ்வணியைச் சேர்ந்தோரின் வாய்பாட்டு ரீதியில் அமையவில்லை.

மண்வாசனை, யதார்த்தம் ஆகிய இரண்டு பண்புகளையும் வேண்டுமென்றால் முற்போக்கு அணியிலிருந்து பெற்றுக் கொண்டவை எனக் கொள்ளலாம். முற்போக்கு அணியைச் சேர்ந்த முஸ்லிம் எழுத்தாளர்களுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உண்டு. இவர்கள் எத்தகைய சூழல் மாற்றத்தின் மத்தியிலும் இஸ்லாத்தினூடாகவே புதிய சிந்தனைகளையும் பார்க்கின்றனர். மார்க்சிசம் கூட இஸ்லாத்தினூடாகவே இனங்காணக்கூடிய தன்மை முஸ்லிம் முற்போக்கு எழுத்தாளர்களில் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த அடிப்படையிலேயே அ. ஸ. அ. வின் சிருஷ்டிகளை நோக்கமுடியும்.

இவரது பிரதேச நாவலான 'பனிமலர்' மட்டக்களப்புப் பிரதேசத்திலுள்ள எல்லா மக்களதும் வாழ்க்கை முறைகளையும் பிரதிபலிக்கிறதா அல்லது முஸ்லிம் மக்களது வாழ்க்கை முறைகளை மட்டும் பிரதிபலிக்கிறதா என்கின்ற வினா எழுகின்றது. இதில்வரும் பாத்திரங்கள் முஸ்லிம்களாகவே இருப்பதை மாத்திரம் கருத்தில் கொண்டு முஸ்லிம்களின் வாழ்க்கை முறைகளை மாத்திரம் சித்திரிக்கின்றதென்று அறுதியிட்டுக்கூறிவிட முடியாது. சமய வழிபாடுகள், ஆசார சீலங்கள் நம்பிக்கைகள் என்பன இரு சமூகத்தவருக்கும் வெவ்வேறாக அமைந்திருக்கலாம். பண்பாடு பழக்க வழக்கங்கள், கலைகள் என்னும் போது மட்டக்களப்புப் பிரதேசத்திற்கே பொதுவான அம்சங்கள் இந்நாவலில் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இவ்வம்சங்களில் தமிழ் மக்களுக்குரியவை முஸ்லிம் மக்களுக்குரியவை என வேறுபடுத்திக்காட்டுவது சுலபமான காரியமல்ல. மட்டக்களப்புப் பகுதியில் தமிழரும் முஸ்லிம்களும் கலந்து வாழ்கின்றனர். இவர்கள் ஒரே குடிவழி மரபுடையவர்கள் கலை, பண்பாடு என்பனவற்றில் அதிகம் வேறுபாடில்லாதவர்கள். இந்நாவலில் மட்டக்களப்புத்தயிரும், மீனும், தேனும் வருகின்றனவென்றால் இவை பிரதேசத்திற்கே பொதுவானவை.

நாவலின் முன்னீட்டில் ஆசிரியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: ''இந்தக் கதையில் நிலப்பிரபுத்துவ மனப்பாங்கிற்கும் கல்வி அறிவு வளர்ச்சியினால் ஏற்பட்ட மனப் பாங்கிற்கும் இடையில் நிகழும் போராட்டததினை நான் சித்திரிக்க முயன்றுள்ளேன்...இந்த நாவலை வாசிப்பவர்கள் மட்டக்களப்புப் பண்பாடுகளையும் முஸ்லிம்களின் தனித்துவமான ஆசாரங்களையும் நமபிக்கைகளையும நிறையக் காணலாம். அது சில இடங்களில் நகைச் சுவையாகவும்அமைந்துள்ளது.

தமிழர்களின் நடைமுறைகள் சில முஸ்லிம் மககளின் வாழ்க்கையிலும் ஊடுருவி இருப்பதை காட்டும் நிகழ்ச்சிகள் இந்நாவலில் உள்ளன: 'நாள் பார்த்துத் தானே தாலிக்குத் தங்கம் உருக்கணும்'. இதுக்கெல்லாம் நாள் காணுமா? தாலிகட்டுற நேரத்தையும் பார்த்துச் சொல்லிருங்களன்... என்றாள் ஹாஜரா உம்மா... ஆலிமுக்குக் கொஞ்சம் கோபம் வந்தாப்போல... இஞ்ச தங்கமுருக்கிற, தாலி கட்டுறதெல்லாம் இஸ்லாத்தில் உள்ளதில்ல. வொலிகாறன் பெண்ணை இரண்டு ஷாஹிதுகளுக்கு முன்னால் ஒப்புக் கொடுக்கணும். மாப்பிள்ளை மஹர் பணத்தைக் காவின் கலரியிலே மாமனாரிடம் கொடுத்துப் பெண்ணை ஒப்பெடுக்கணும். இதுதான் இஸ்லாம்' என்னும் பகுதியிலே முஸ்லிம்கள் மத்தியிலே தாலிக்குப் பொன்னுருக்கல், தாலி கட்டல் ஆகிய நிகழ்ச்சிகள் உள்ளன என்பதை ஹாஜரா உம்மாவின் கூற்றுமூலம் அறியலாம். மரணப்படுக்கையில் இருக்கும் ஒரு தந்தையின் விருப்பத்துக்கிணங்க பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகச் செய்து முடிக்கவேண்டி ஆலிம் இஸ்லாத்தின் நடைமுறையை நினைவு கூர்வதாக இவ்வுரையாடல் அமைகிறது.

'எனக்கு வயதுபதின்மூன்று. என்னும் சிறுகதைத் தொகுதியில் அ. ஸ. அ. அவர்கள் தமது இலக்கிய நோக்கை விளக்குகிறார்: 'சமுதாயத்தின் பிரத்தியட்சமான பிரதிபலிப்பாகத்தான் நான் இக்கதைகளைப் படைத்துள்ளேன். சமுதாய நடைமுறைகள் போக்குகள் என்பவற்றிற்குக் கலைவடிவம் கொடுக்கும் போது தனிமனித சுயாதீனத்துக்கு ஏற்படும் தடைகளை மீறித் தன்னம்பிக்கையோடு முன்னேறும பாத்திரங்கள் பலவற்றை நீங்கள் இக்கதைகளில் சந்திக்கலாம். தனிமனித உணர்வுகள் மதிக்கப்படத்தக்கவை. அத்தகைய சுயாதீனங்களும் உணர்வுகளும் சமுதாயத்தினால் அழிக்கப்படக்கூடாது.,

அ. ஸ அவுக்கு இந்தியாவிலும் புகழைத்தேடிக் கொடுத்தவை அவருடைய இஸ்லாமிய இலக்கியக் கட்டுரைகள் என்றாலும், புனைகதை இலக்கியத் துறையில் இவரின் சாதனைகளைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

---

### இன்று 3வது சிரார்த்ததினம்

## அமரர் அல்பிறட் தம்பிஐயா

தீவுப்பற்றின் முடிசூடா மன்னனாய் விளங்கிய திருவாளர் அல்பிறட் லியோ தம்பியையாவை நினைக்குந்தோறும் அவர் தமிழ் மண்ணுக்கும் மக்களுக்கும் ஆற்றிய சேவை எமது கண் முன்னே நிற்கின்றது. இன்று அன்னாரது 3வது சிரார்த்ததினமாகும்.

ஊர்காவற்றுறையிலுள்ள கரம்பனைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கற்றார். தமது உயர்கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்த இவர் கொழும்பிலுள்ள சென். பெனடிக்ற் கல்லூரியிலும் சென். ஜோசவ் கல்லூரியிலும் அதைத் தொடர்ந்து மேற்கொண்டு கற்றடங்கியவரானார். அதன் பின் பெருமைக்குரிய தன் தந்தையார் தம்பியையா அவர்கள்வழிநடத்திய வணிகத்துறையில் ஈடுபட்டார்.

பிரித்தானியர் ஆட்சியில் உலகளாவிய வர்த்தகத் துறையெல்லாம் ஆங்கிலேயரின் கைக்குள்ளே அடங்கிக் கிடந்தது என்பதை நாம் அறிவோம். அவற்றுள் பெரும் வணிக நிறுவனமாகிய 'காகோ போட் டிஸ்பாச் கோ' என்னும் கப்பல் ஸ்தாபனத்தை ஆங்கிலேயரிடமிருந்து பெற்று திறம்பட நடத்தி அதன் நிர்வாகக் கிளைகளைப் பெருக்கினார்.

உல்லாசப்பிரயாணத்துறையில் புகழ்பெற்ற 'ஹோட்டல் ஒன்றை ஸ்தாபித்து ஹோட்டல் நிர்வாகத்திலும் முன்னணியில் நின்றார். அத்துடன் ஆங்கிலேயரால் நடாத்தப் பெற்று நட்டத்தில் கைவிடப்பட்ட பழம் பெரும் நிறுவனங்களை கையேற்றும் அதிபராகத் திறம்பட நடாத்தினார்.

அக்காலத்தில் கொழும்பு மாநகரில் தமிழ் மக்கள் சுயமரியாதை கௌரவத்தோடு வாழ்வதற்கும் எத்தனையோ இளைஞர்கள் அங்கு வேலை வாய்ப்புப் பெறுவதற்கும் அமரர் அல்பிரட் லியோ தம்பியையா அவர்களே முன்னோடியாய் விளங்கினார். எத்தனையோ தமிழ் குடும்பங்களுக்கும்குறிப்பாக தீவுப் பற்றிலுள்ள மக்களுக்கும் வளமான வாழ்வளித்த வள்வலாய் இவர் விளங்கினார்.

1947ம் ஆண்டு முதல்முறையாக பாராளுமன்ற அங்கத்தவராக ஊர்காவற்றுறைத் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் மக்களுக்கு அளித்த தன்னலமற்ற சேவை கருதி மீண்டும் 2வது முறையாக மகோன்னத வெற்றியைப் பெற்றார். அக்கால அரசியல் வாழ்க்கையில் தமிழ் மக்களுக்கு குறிப்பாகத் தீவுப்பற்று மக்களுக்கு இவர் தமது விரிவான சேவையை ஆற்றினார். பண்ணை-புங்குடுதீவுப் பாலம், வேலணை மத்திய கல்லூரி, தீவுப்பகுதியெங்கும் பல ஆரம்பப் பாடசாலைகள், வானொலி தந்திப் பரிவர்த்தனைச் சேவைகள் முதலியன இவரால் ஸ்தாபிக்கப்பட்டவைகளாகும். அத்துடன் தீவுகளுக்கு கடல் மார்க்கமான பிரயாண சேவைகளையும் தொடக்கி வைத்தார்.

வணிகத்துறையிலும் அரசியல் வாழ்விலும் கொடிகட்டிப் பறந்த இவர் சினிமாக் கலைத்துறையிலும் தன்னிகரில்லாத் தலைவராய் விளங்கினார். திரைப்படத் தொழிலை முதன்முதலாக இலங்கையில் ஆரமபித்தவர் இவர்தான். இவர் கட்டியெழுப்பிய சினிமா நிறுவனங்கள் இன்னும் சினிமாக்கலை வளர்ச்சிக்கு மூலாதாரமாய் விளங்குகின்றன.

...9ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணத் தமிழர் உணவுப் பழக்கங்கள்
## ஒரு நோக்கு

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

மாலையுணவு அநேகமாக பொழுது கருகியவுடன் உண்பதே வழக்கமாக இருந்தது. நெல்லரிசிச்சோறு, தினையரிசிச்சோறு, கறிவகை, புட்டுவகை உணவாக ஏனது குரக்கன், ஒடியல், மரவள்ளி என்பவற்றின் மாவிலே புட்டு அவித்து அதனுடன் சோற்றைக் குறைத்து உண்ணுவர் மாச்சத்து மேலதிகமாகச் சேர்வதை இது தடுத்தது. கறி வகையில் மரக்கறியும் மீனும் சேர்க்கப்பட்டது. நாளாந்தம் மாமிசம் சேர்ப்பதில்லை. கீரை முக்கியமாகச் சேர்க்கப்பட்டது. பயறு, தயிர், நெய் என்பன மரக்கறி உணவாளரிடையே முக்கியமாகக் கருதப்பட்டது.

உணவுவகைகளை நாளாந்தம் தயாரிப்பதில் பெண்கள் விசேட கவனம் செலுத்தினர். மீன், மரக்கறி என்பவற்றைக் கால நிலைக்கும் உடல்நிலைக்கும் ஏற்ற வகையிலே தெரிவுசெய்து பாகம் செய்தனர். சோறு சமைக்கும் போது நெல்லரிசியாயின் கஞ்சி வடியாது 'உவித்து' எடுத்தனர் கஞ்சிவடித்தால் அதனையே வீணே கொட்டிவிடாது ஆடுமாடுகளுக்கு உணவாக்கினர். தினையரிசியைக் கஞ்சிவடியாது சோறாக்குவது கஷ்டம். அதனால் அதற்கு அளவுக்கதிகமாக நீரிட்டுப் பதமாக வேகவைத்து வடித்தெடுப்பர் சோறு நன்றாக வேகவேண்டும். ஆனால் 'குழைந்து' போகக் கூடாது மேலும் ''முட்டரிசி''ப் பதமாகவும் இருக்கக்கூடாதென்பது யாழ்ப்பாணப் பெண்களின் கேள்வியறிவு நிலையில் சோற்றைப் பாகம் பண்ணும் அநுபவமாகவே அமைந்தது.

நெல்லரிசிச் சோற்றுக்கு அளவாக நீர்விட புதிய அளவுகருவி, யொன்றையும் கண்டுபிடித்துள்ளனர். அரிசியும் நீருமாக பானையிலே இருக்கும் போது அதனுள்ளே அகப்பையை நிறுத்தி வைத்தால் அதன்கண் மறையுமளவுக்கு மேல் நீர்மட்டம் உயரக்கூடாது. மெல்லிய அரிசிவகையாயின் இரண்டு விரற்கணுவளவு நீர்போதுமானது கீரைவகைகளை வெட்டுமுன்பாக நீரில் அலம்பிச் சுத்தம் செய்யவேண்டும். கீரைவகையை நன்றாக வேகவைக்க மேலதிக நீர்தேவையில்லை. அடுப்பின் மிதமான எரிபபு இயற்கையாகக் கீரைவகையிலுள்ள நீர்பற்று இவையிரண்டும் கீரைக் கறி பாகம்பெறப்போதுமானவை. அகத்தி, பொன்னாங்காணி பசளி குறிஞ்சா, முல்லை, சாரணை, முருங்கை (கறிமுருக்கு, முள்முருக்கு இரண்டினதும் தளிர்கள்) சண்டி, முளைக்கீரை வகை அறக்கீரை, முசுட்டை போன்ற இலைக்கறிவகைகளில் காலநிலைக்கேற்ப ஏதாவது ஒன்று நாளாந்த உணவில் இடம் பெறவேண்டுமென்ற நியதி இருந்தது. அகத்தி, பசளி, முளைக்கீரை வகை, அறக்கீரை, சண்டி என்பன வெப்பமான காலத்திலும் ஏனையவை குளிர்காலத்திலும் உணவில் இடம் பெற்றன.

காய்கறிவகையிலும்குளிர்சூடு. என்ற வேறுபாடு பார்க்கப்படும். வெண்டி, சுரை, பூசணி, பீர்க்கு, புடல் என்பவை குளிர் மரக்கறி வகைகளாக கத்தரி, முருங்கை மிளகாய், பயற்றங்காய் என்பன வெப்பமரக்கறிகளாகவும் அமைய பாகற்காய் முக்கியமான உடல் நலத்திற்கு ஏற்றதாகக்கருதப்பட்டது. தக்காளி அதிகமாகச் சேர்ப்பது தவிர்க்கப்பட்டது. அவரை. பருப்புவகைகள் அளவாகவே சேர்க்கப்பட்டன. மீன்வகைகளிலும் இச்சூடு குளிர்க்கோட்பாடு பொருந்தியிருந்தது. நண்டு, இறால், கணவாய், மட்டி, போன்றவை உடம்பின் சூட்டை அதிகரிக்கும் எனக்கருதப்பட்டது. நெத்தலி, சுறா, ஒட்டி, ஓரா, திருக்கை போன்றவை குளிர்மையானவையாகக் கருதப்பட்டன. மாமிசத்திலும் கோழி, மாடு என்பன சூடு எனவும் ஆடு, பன்றி என்பன குளிர் எனவும்; மான், மரை, முயல் என்பன உடல் நலத்திற்கு ஏற்றனவாகவும் கருதப்பட்டு வந்துள்ளன.

சிறுவர் குழந்தைகளின் சமிபாட்டு நிலைக்கேற்ற உணவுகள் தயாரிக்கப்பட்டன. பல்லுமுளைக்காத குழந்தைகளுக்கு கஞ்சித்தெளிவு, பனங்கட்டித்தண்ணீர் வரகரிசிமாக்களி போன்றவற்றை உப உணவாக வழங்குவர். கீரை வகைகளை அவித்து அதன் தண்ணீரையும் சிறப்பான பானமாகப் பருகத்தருவர். தூதுவளை இலை, அறக்கீரை, மணத்தக்காளி இலை, கற்பூரவள்ளி இலை என்பவற்றினை சிறப்பானவையாகக் கருதினர். முதியவர்களின் உடல்நிலைக்கேற்ப இலகுவில் சமிபாடடையக் கூடிய உணவுகளாக கஞ்சி, கூழ், கரையல் என்பவை தயாரிக்கப்படும், பாற்கஞ்சி புளிக்கஞ்சி உப்புக் கஞ்சி இலைக்கஞ்சி என கஞ்சி பலவகைப்படும். ஒடியற்கூழ், பனங்கட்டிக்கூழ், ஊதுமாக்கூழ் எனக் கூழிலும் பலவகையுண்டு, பல்லில்லாத முதியவர்கள் சிறப்புணவாகக் ''கரையல்'' விசேடம் பெற்றிருந்தது.

நாளாந்தச் சமையலிலே சோறு கறியும் முக்கிய உணவாகக்கருதப்பட்டன இதனால் கறிகளைச் சமைக்கும் போது சில வகுக்கப்பட்ட முறைகள் நாளாந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டன. சுண்டல், குழம்பு, பொரியல், வெள்ளைக்கறி, சம்பல், சொதி என்னும் வகைகள் அதிகமாக இடம் பெறும். பொருளாதார நிலைக்கேற்ப இவற்றில் இரண்டொன்றைச் சிலர் குறைத்துக் கொள்வர். எனினும் சுண்டல், குழம்பு, சொதி என்ற மூன்றும் நிச்சயமாக நாளாந்தம் இருக்கும். இதனால் கீரைவகையும். காரமும் யாழ்ப்பாணத் தமிழர் உணவில் முக்கியமாக இடம் பெற்றிருந்ததையும் உணரலாம் காரத்தை மட்டுப்படுத்தச் சொதி என்ற பாகம் அவசியமானதாக இருந்தது. சிலவேளைகளில் இலை வகைகளைத் தனியான கறியாக ஆக்காமல்சொதியுடன் இணைத்து விடுவதும் உண்டு அகத்தியிலைச் சொதி, முல்லைச்சொதி, முசுட்டைச் சொதி, மாங்காய்ச் சொதி, தக்காளிச் சொதி, முருங்கையிலைச் சொதி எனச் சொதியிலேயே பல்வேறு தயாரிப்புகள் உண்டு. கறிகளில் வெங்காயம், வெந்தயம், கடுகு, மிளகு என்பன கட்டாயமாக அளவுடன் சேர்க்கப்படும். இவற்றின் காரத்தைக் குறைக்கத் தேங்காய்ப்பால் அளவுடன் சேர்க்கும் வழக்கம் இன்னும் உண்டு.

உணவுத் தயாரிப்பில் எண்ணெய் வகைகளைச் சேர்ப்பதில் மிகுந்த கவனம் எடுக்கப்பட்டது. நெய், நல்லெண்ணெய் இலுப்பெண்ணெய் என்பனவே முன்னர் உணவுத் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டன. பிற்காலத்தில் பொருளாதாரச் சிக்கலால் தேங்காயெண்ணெய் சேர்க்கப்படலாயிற்று. பால் தயிர் மோர் என்பனவும் உணவில் முக்கிய இடம் பெற்றிருந்தன. மரக்கறி உணவு உண்போரது நாளாந்த உணவில் இவை சேர்க்கப்பட்டன சில உணவு வகைகள் எதிர் உணவுகளெனக் கருதப்பட்டன. மரவள்ளிக்கிழங்குடன் இஞ்சி சேர்ப்பது தவிர்க்கப்பட்டது. கணவாய் சாப்பிட்டால் மாம்பழம் சாப்பிடக் கூடாது என்று கட்டுப்படுத்தப்பட்டது கூழ், எள்ளுப்பா, தோசை என்பனவற்றை உண்டால் குளிர்ந்த நீர் பருகுவது தடுக்கப்பட்டது பலாப்பழம் உண்டபின் அதன் விதையொன்றையும் உண்டால் வயிற்றுக் கோளாறு ஏற்படாது என்ற நம்பிக்கையிருந்தது. பனங்கிழங்கை வேகவைக்கும் போது சம்பல் அல்லது இரும்புத்துண்டு ஒன்றைச் சேர்த்து வேகவைத்தால் அதன் சொறித்தன்மையை நீக்கும் என்ற வழக்கம் கடைப்பிடிக்கப்பட்டது. வெண்டிக்காயுடன் எலுமிச்சம் புளியைச் சேர்த்து வேகவைத்தால் அதன் வழுவழுப்பிருக்காது என்பர்

'அவிந்து கெட்டது மீன்' 'அவியாமற் கெட்டது இறைச்சி', என்பது பழமொழியாகவே அமைந்து விட்டது. சில காய்கறிகளைப் பச்சையாகவே உண்ணும் வழக்கமிருந்தது. அதன் பக்குவத்தைப் 'பச்சடி' என்றே அழைத்தனர் மாங்காய்ப்பச்சடி, விளாங்காய்ப்பச்சடி, தக்காளிப் பச்சடி, தூதுவளைப்பச்சடி, மிளகாய்ப்பச்சடி, நெல்லிக்காய்ப்பச்சடி, வேப்பம்பூப்பச்சடி என பல்வகையான பச்சடிகள் செய்யப்பட்டன. 'பச்சடி' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சம்பல்' 'துவையல்' என்ற சொற்களும் கிராமத்தவர்களிடை வழங்கப்பட்டன வெள்ளரிக்காய், பாகற்காய் என்பன முக்கிய காய்களாகப் பச்சடி செய்ய உதவின.

காலை வேளையிலும் இடை நேரங்களிலும் பருகும் பானங்களாகப் பழந்தண்ணீர், மோர், நன்னாரிவேர் அவித்த தண்ணீர், கொத்தமல்லி அவித்த நீர் என்பனவே யாழ்ப்பாண மக்களால் பருகப்பட்டு வந்தன. ஆனால் மேலைநாட்டவரால் இலங்கையில் தேயிலையும், கோப்பியும் அறிமுகம் செய்யப்பட்டுப் பெருந்தோட்டப் பயிர்களாக அமைந்த பின்னர் அவற்றைப் பானமாகப் பருகும் வழக்கம் தொடங்கியது ஆனால் இன்னும் சில கிராமங்களிலே வாழ்பவர்கள் தேயிலை, கோப்பி போன்ற பானங்களைப் பருகாது வாழ்கின்றனர். ஆட்டுப்பால், மாட்டுப்பால், கருப்பநீர், இளநீர்கள் என்பவற்றை அருந்துகின்றனர். மக்களது நாளாந்த உணவிலே சத்துணவு, கொழுப்புணவு, எதிருணவு பற்றிய சிந்தனைகள் இருந்தன குறிப்பாகப் பெண்கள் இயற்கையான வளர்ச்சி நிலையிலேயே அவை பற்றிய அறிவைப் பெற்றிருந்தமை முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியதாகும்.

### சிறப்பு நிலையில் உணவுப் பழக்கம்

சிறப்பு நிலையிலே மக்களிடையே நிலவிய உணவுப் பழக்கத்தை நோக்கும்போது பெண்களின் வளர்ச்சி நிலைப்போக்கிலே அவை பெரிதும் தொடர்புற்றுள்ளன. இயற்கை நிலையிலே ஆணின் உடல் வளர்ச்சி வெளிப்படையான மாற்றங்களால் அறியப்படும். குரல் மாற்றம், மீசை தாடி என்பவற்றின் வளர்ச்சி, உடல்பருமன் என்னும் மாற்றங்களால் ஆணின் வளர்ச்சி நிலையைக் கணிக்கலாம். ஆனால் பெண்ணின் வளர்ச்சி உள்ளார்ந்த மாற்றங்களையும் கொண்டது. பூப்பு நிலையும் தாய்மை நிலையும் பெண்ணுக்கு இயற்கை நிலையிலே அமைந்த சிறப்பு நிலைகளாகும். இந்நிலைகளிலே பெண்ணின் உடல்நலத்திலே போதிய கவனம் எடுக்கவேண்டியதும் அவசியம். பெண்ணினது அப்போதைய உடல்வளர்ச்சி குடும்பநிலையில் மட்டுமன்றிச் சமூகநிலையிலும் முக்கியமானதாகும். அதனால் இக்காலகட்டங்களின் உணவுப் பழக்கங்களும் தனித்துவமுடையனவாக அமைந்துள்ளன.

...9ஆம் பக்கம் பார்க்க




## தென்னகத்துத் தெருக்கூத்து

தெருக்கூத்து தமிழரின் மூலசொத்து. அதனை பயன்படுத்தி மக்கள் மன்றில் பல கருத்துக்களை பரப்பச் செய்து விடலாம். இதன் அடிப்படையிலேயே பல தெருக்கூத்துப் பாணி நாடகங்கள் கூட இளம் கலைஞர்களால் ஆடப்படுகின்றன. இக்கட்டத்தில் தென்னகத்து தெருக்கூத்தை வளர்க்கும் நோக்க ஆய்வுகள் நிகழ்த்தி வரும் திரு. ந. முத்துசாமி பார்த்த ஒரு தெருக்கூத்து பற்றிய சில அம்சங்கள் இதோ:

அன்று நடந்த வடதெரு வாத்தியாரின் தெருக்கூத்து கீசகவதை. கீசகனாக வாத்தியாரே. திரௌபதியாக பாலகிருஷ்ணனும், பீமனாக நடராஜமூர்த்தி என்பவரும் ஆடினார்கள். அவர்களுக்கு தெரிந்த நடனங்கள் வேற்றுமைகளில் கூத்து நடந்தது. 'கோரஸ்' போன்று பின்பாட்டுக்காரர்களின் குரலின் இணைப்பு இருந்தது. பிரவேச போழ்து தெருக்கூத்துக்களின் அரிய அம்சமாகும். நடைகள் ரோமியமானவை, எனினும் அவை அழகானவை; கம்பீரமானவை

தெருக்கூத்துக்களில் பாடல்களாக கூத்து தொடங்குதல் இயல்பு. பிரமிப்புகளாக நடன நடை ... இருக்கவேண்டும். பாத்திர இருப்பில் அதிசயிப்பு வேண்டும். அபிநயங்களும் பேச்சுத் தொனிகளும் மனக்கிளர்ச்சியை வைத்திருக்க வேண்டும். ஆடை அலங்காரங்கள் புதுப்பிக்கப்பட்டு கவர்ச்சியாய் அமைய வேண்டும், கூத்தில் அடியிட்டு நடைபோட்டு வட்டச்சுற்று வட்டச்சுற்றாக சுழன்றுடும் தோரணை இடம்பெற வேண்டும். தெருக்கூத்து ஒரு கலைஞனை சுதந்திரமாக செயல்படும் ஒரு தியேட்டர் வடிவம். இதை சுவைத்திட மேற்கூறிய அம்சங்கள் பற்றிய அறிவு அவசியம்.

## சானா பற்றி கலாநிதி கைலாசபதி

ஏ.ரி.பொன்னுத்துரை

கலை இலக்கிய உலகில் "வணங்காமுடி"யாக மிளிர்ந்து, காத்திரமான பங்களிப்பை அளித்துள்ள காலம் சென்ற கலாநிதி க. கைலாசபதி அவர்கள் நல்ல ஒரு நாடக சுவைஞர். பணம் கொடுத்து நுழைவுச் சீட்டு பெற்று, கலை ஆக்கங்களை சுவைத்து, இறுதியில் நடிகர்களுடன் உரையாடி தமது உணர்வுகளை வெளியிடும் பண்பாளர். 'சானா'வும் கைலாசபதியும் இரு துருவங்களோ என நான் எண்ணிய காலமுண்டு. கைலாசபதியின் கட்டுரை, உண்மைக் கலைஞனை இனங்காணும் பெருந்தன்மையை உணர்த்திற்று. கைலாசபதியின் பேனாவில் இருந்து சில வரிகள்:- 1952 அளவில் 'சானா' மூலம்புதிய ஒரு உலகமே எனக்கு அறிமுகமாயிற்று மேடை நாடக அனுபவத்துடன் வானொலி நாடகத் தயாரிப்பாளராக வந்த அவருக்கு நாடகக்கலையை பிறருக்கு கற்றுக்கொடுக்கும் தகுதியும் தகைமையும் திறமையும் இருந்தன. கலைஞர்களிடமிருந்து அவரவர் ஆற்றல்களை வெளிக்கொணரும் மந்திரசக்தி அவரிடம் இருந்தது. அந்த நாட்களில் நாடகங்கள் முன்னரே ஒலிப்பதிவு செய்யப்படுவதில்லை. உரிய காலத்திலேயே நேர நடிக்க, ஒலிபரப்பாகும். இக்காலத்தில் பலருக்கு இதனைக் கற்பனை செய்து பார்ப்பதே கடினமாகவிருக்கும். அவரது நினைவுச் சுரங்கத்தில் இருந்து நகைச்சுவை வெடிகளை அதிரும் இடைவெளியாகப் பேசுவார்; சிலரது குரலை ஒலித்துக் காட்டுவார். பலரின் வேடிக்கைமைகளை உடைத்துக் காட்டுவார், வயிறு குலுங்கச் சிரிக்கும் வேளை சிந்திக்கவும் செய்து விடுவார்

"சானா தலைமையில் கலைஞர்கள் இலங்கை நாடக வரலாற்றில் ஒரு சகாப்தத்தை பிரதிநிதிப்படுத்தினர். வானொலி நாடகத் துறையில் சானா குரு. நாம சீடர்கள்"

'சானா'வைத் தெரியாதா? என்ற எள்ளல்கள் இடைக்கிடை ஒலித்திடும் நம் கலையுலகில், கண்டிப்பான விமர்சகர் கைலாசபதியின் பேனா சீரிய பாதையில் சென்றமை அவரது பெருமையை தனிப்பண்பை காட்டுகின்றது வானொலித் தயாரிப்பாளன் என்ற முறையில் கண்டனக்குரலை கைலாசபதி மேலும் பலதடவை திருப்பியதுண்டு என சானா கூறிய ஞாபகம் வருகிறது முரண்பாட்டின் மத்தியிலும் மெச்சவேண்டியதை மெச்ச கைலாசபதி பின்நிற்பதில்லை. 'காலந்தாழ்த்தி மெச்சுதல் பொறுமைக்கு அறிகுறி' என்பதை சுவைஞர்கள் உணர்தல் மேடைக்கலைக்கு துணைநிற்கும்.

## மாஸ்கோ நகர் சிறுவர் அரங்கில்

திரை மேலே தூக்கப்படுகிறது. மேடை உயிர் துடிப்படைகிறது. கப்பலின் மேல் மேடையில் கப்பலோட்டிகள் ஆடுகின்றனர்; பாடுகின்றனர். ஒவ்வொரு பாத்திரங்களின் வருகையையும் சிறுவர்கள் உன்னிப்புடன் அவதானிக்கின்றனர். ஒரு உத்தியோகத்தரின் மிருக சுபாவம் தப்பற்ற போக்கு. சிறுவர்கள் மனதில் பய உணர்வை பீடிட வைக்கின்றன. மக்சிம்கா என்பவன் காப்பாற்றப்படுவதை ஆவல் ததும்பக் காண்கிறார்கள். மாலுமிகள் மக்சிம்காவை அன்புடன் நடத்தும் விதம் கண்டு சிறுவர்களுக்கு ஆனந்தம் மேலிடுகிறது. மக்சிம்காவை காப்பாற்றியவன்

...9ஆம் பக்கம் பார்க்க

## கவிஞர் தேவதாசனின் வெடியரசன்

—நாடகம்—

### அங்கம் எட்டு

இடம்: காவிரிப்பூம் பட்டணத்தின் கடற்கரையோரம்

பங்குகொள்வோர்: மாசத்துவான் – மானகர்

நிலைமை: கோவலன் – கண்ணகிக்கு மணவிழா நடத்துவதுபற்றி சம்பாஷித்தல்...

மாசத்துவான்: மானகர்! மைத்துனரே! எனது மகன் கோவலனுக்கும், வயது வந்துவிட்டது. காவிரிப்பூம் கடற்கரையோரத்தில் ... அன்றொருநாள்... நாமிருவரும் வணிக நோக்கமாக நடந்துபோகையில்... செய்துகொண்ட ஒப்பந்தத்தைப்பற்றி நினைவூட்ட விரும்புகிறேன்.

மானகர்: நினைவிருக்கின்றது! மாசத்துவானே! காவிரிப்பூம் கடற்கரையில் இருவரும் நடந்து போகையில், அலைகடலில், மெல்லென மிதந்துவந்த ஒரு பேழையை ஒரே சமயத்தில் கண்டோம்.

மாசத்துவான்: இருவரும் ஒரே நேரத்தில், அப்பேழையைக் கண்டோம். அப்போதுதானே ! ஒப்பந்தம் நடந்தது.

மானகர்: ஒப்பந்தத்தி லொன்றுமில்லை... ஆனல்... ஆனல்...

மாசத்துவான்: ஆனலென்று ஏன் இழுக்கின்றீர்!

மானகர்: பேழை கடலில் மிதந்துவரும் போது, அப்பேழைக்குள், ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது, அழுகுரலைக் கேட்டதும் – பேழைக்குள், பெண்குழந்தை என்றால் எனக்கென்றும் ஆண்குழந்தையாயின் உமக்கென்றும் ஒப்பந்தம் செய்தோம்.

மாசத்துவான்: அந்த ஒப்பந்தம் என்மனத்திரையில் இன்றும் நீங்காத நினைவாக இருக்கின்றது அந்தப் பெண்குழந்தை வளர்ந்து, பருவமங்கையாக வந்ததும், எனது மகன் கோவலனுக்கு, அந்தப்பெண்ணை, மணமுடித்துத்தர வேண்டுமென -உம்முடன் ஒப்பந்தம் செய்தேன். ஆனல் நீரோ! வயது வந்தும், உமது மகளின் மணவிழா பற்றி கவனிக்காமலிருப்பது தான் எனக்குக் கவலையாகவிருக்கின்றது.

மானகர்: கவனிக்காமலிருக்கவில்லை மைத்துனரே! எனது மகளின் மணவிழா வைப்பதற்கான எல்லா ஆயத்தங்களையும் செய்துகொண்டு வருகின்றேன். மணமகளுக்கு வேண்டிய மார்ப்பதக்கம், அட்டியல்,நெற்றிப்பட்டம், மோதிரம், மூக்குத்தி, மயிர்மாட்டி, சிமிக்கி, தோடு, காப்பு, மேகலை ஆகியவைகளை, மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதுமராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வயிடூரியம் ஆகிய நவரெத்தினங்களைக் கொண்டு, பலவகையான, அழகுறு ஆபரணங்களைச் செய்து வைத்திருக்கின்றேன். அத்துடன், மணமகளுக்கு வேண்டிய வர்ணநிற ஆடைகளையும், வாங்கி வைத்துள்ளேன். ஒரு குறையுண்டு மைத்துனரே!

மாசத்துவான்: இதைவிட வேறு என்ன குறை இருக்கின்றது...

மானகர்: குறையொன்று இருக்கின்றதே!

மாசத்துவான்: குறையைக்கூறும்... தயங்காமல் கூறும்... நிறைவு செய்கின்றேன்.

மானகர்: ஒன்றுமில்லை. எனது மகள் கண்ணகிக்கு கொடுக்கவேண்டிய, காற்சிலம்புக்குள், வைக்கவேண்டிய பரல்களில், அரவி மணி... அதாவது பாந்தள்மணியை, வைத்தே செய்ய வேண்டுமென, எனது பொற்கொல்லர், நிபந்தனை விதித்துள்ளார்.

மாசத்துவான்: அரவின் மணியாக, நாகரெத்தினத்தை எடுத்தால், சரிதானே!

மானகர்: பாந்தள் மணியை, எமது காவிரிப்பூம் பட்டணத்தின் பலவிடங்களிலும், பல ஏவலரைவிட்டு தேடினேன். காவிரிப்பூம் பட்டணத்தில் ஓரிடத்திலும இந்த மணி எடுக்கவில்லையே!

மாசத்துவான்: இதுபற்றி ஏன் கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்றீர். இந்த அரவின் மணியை, காவிரிப்பூம் பட்டணத்தில் இல்லையென்றால், இமயமலையில் புலிச்சின்னத்தை பொறித்த, வலிகொண்ட சோழமன்னர் கரிகால் வளவனிடத்தில் போய்க் கேட்போம். தரணியிலே பரணிபாடிய சோழன் – தனது காலடியில் பகைவரின், முடிகளைப் பதிய வைத்தவன் – தனது தலைநகராகிய 'பூம்புகாரிலென்றாலும், கட்டாயம் எடுத்துத்தருவான் வணிகர்கள் எவரையும், துணிவுடன் ஆதரிக்கும், கரிகால்வளவன் எப்படியாவது, அரவின் மணியை எடுத்துத்தருவார்.

மானகர்: சரி! நாளை, சோழசாம்ராஜ்ஜியத்தின் பூம்புகாருக்கு போவோம்...

(தொடரும்)

# நோபல் பரிசு பெறும் பிரெஞ்சு இலக்கியகர்த்தா குளொட் சைமன்

1985ம் ஆண்டிற்குரிய இலக்கியத்திற்கான நோபல் பரிசை பிரான்ஸ்நாட்டைச் சேர்ந்த நாவலாசிரியரான குளோட் சைமன் பெறுவதன் மூலம் மேலும் ஒரு இலக்கியகர்த்தா கௌரவிக்கப்படுகின்றார். இவரை பிரஞ்சுநாட்டின் நவீன நாவல் இலக்கியத்தின் முன்னோடியென மேற்கத்திய நாடுகள் போற்றுகின்றன. 72வயதான இவர் முந்திரித்தோட்ட விவசாயி எனினும் நவீன நாவல்களைப்படைப்பதில் முதன்மையானவராகத் திகழ்கின்றார். இவரது நாவல்கள் எப்பொழுதும் சர்ச்சைக்குரியனவாக அமைவதினால் பலரது கண்டனங்களுக்கும் ஆளாவதில் வியப்பில்லையெனலாம்.

குளோட் சைமனின் நாவல்களின் தலைப்புக்கள் புதுமையானவையாக இருப்பதுடன், உள்ளடக்கங்களும் சர்ச்சைக்குரியனவாக அமைகின்றன, 1957ல் வெளிவந்த 'காற்று'' 1958ல் வெளிவந்த 'புல்லு' 1961ல் வெளிவந்த "(F) பளண்டரின் பாதை" என்பன குறிப்பிடத்தக்கன. சுவீடன்நாட்டு 'அக்கடமி ஒவ் சயன்சஸ்' என்னும் ஸ்தாபனம், இவரது நாவல்களை விமர்சித்த போது, 'இவரது எழுத்துநடை வாசகர்களோடு நேரடியாகப் பேசுவதாக அமைவதானது, சாதாரண வாசகனுக்கும்கூட எளிதாகப் புரியவைக்கக்கூடியதாக அமைகின்றது, எனக் கூறலாம்.

நம்பமுடியாத கற்பனைகளையும், சம்பவங்களையும் இணையோடியனவாக இவரது நாவல்கள் இருந்தும்கூட அவை வாசகர்களைக்கவரக்கூடியதாகப் படைக்கப்படுவதினால்; கண்டிப்பான விமர்சகர்களையும் சற்றே சாந்தமுறச் செய்யுமென்பதில் ஐயமில்லை. இவர் கதை சொல்லும் நடை, நம்பமுடியாத சம்பவங்களையும் கூட வாசகனின் மனதில் ஆழப்பதியக்கூடியதாகச் செய்கின்றது.

திரு. குளோட் சைமன், மடகாஸ்கரில் ஒரு இராணுவ அதிகாரியின் மகனாகப் பிறந்தும், இளவயதிலேயே அனாதையானார். இதன் காரணமாக இளவயதிலேயே, பாட்டியின் தயவிலே வளர்க்கப்பட வேண்டியவரானார், இரண்டாவது உலகமகாயுத்தத்தின் போது போர்க்காலக் கைதியாக ஒரு முகாமில் அடைபட்டிருந்த சமயம் தப்பிச்சென்று, தெற்குப் பிரான்சில் குடிபுகுந்தார். ஜனநடமாட்டமில்லாத, பகுதியொன்றில், முந்திரிகைத் தோட்டமொன்றை அமைத்து விவசாயத்தில் ஈடுபட்டார். இவர் தனது ஓய்வுநேரத்தில் கலைகளில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தார். ஆரம்பத்தில் ஓர் ஓவியராகவும், பின்பு ஒரு புகைப்படக் கலைஞராகவும் செயல்பட்டார் இவைகாரணமாக நாவல்கள் எழுதுவதிலும் நாட்டம் கொண்டார், ஓய்வுநேரத்தில் கலைகளிடம் தஞ்சமடைந்த குளோட்மன், நாளடைவில் ஒரு சிறந்த நாவலாசிரியராகவும் பரிணமித்தார்.

ஆரம்பத்தில் இவர் எழுதிய நாவல்கள், சுயசரிதைகள் உருவில் வெளிவந்தன. 1940களின் பிற்பகுதியிலும் 50களின் முற்பகுதியிலும் இவ்வகையான நாவல்களே வெளிவந்தன. ஆரம்ப காலத்தின் இவை அவ்வளவாக வாசகர்களைக் கவரவில்லை. இருப்பினும், நாளடைவில் ஜனரஞ்சகமான முறையில் எழுதிப் பல்லாயிரக்கணக்கான வாசகர்களைக் கவர்ந்ததோடு; ஒருடசினுக்கு மேற்பட்ட ஐரோப்பிய மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு அமோகவிற்பனையைப் பெற்றன.

உண்மையில் 'காற்று'' என்னும் இவரது நாவலே இவரது வெற்றியின் முதற்படியாக அமைந்ததெனலாம். இதன் காரணமாக பிரான்சின் 'புதிய நாவல்' உலகில் குளோட்சைமன் தனக்கே உரித்தான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டார், இதன் காரணமாக பலரது கவனத்தையும் அவர் ஈர்த்துக் கொண்டார். இந்த வெற்றியின் பின் 1961ல் 'ஹிஸ்ரோயர்' (Hisotoire) என்ற அவரது நாவல் 'பிறிக்ஸ்மெடிகிஸ்' என்ற பரிசைப்பெற்றது. இந்தப்பரிசைப் பெற்றதன் மூலம் உலக நாவலாசிரியர்களின் வரிசையில் வலம்வரத் தொடங்கினர்.

குளோட்சைமனின் பெயரானது பலதடவைகள் நோபல் பரிசுக்கு சிபார்சு செய்யப்பட்டும் இம்முறைதான் அவரால் இப்பரிசைப்பெற முடிந்தது 2,25,000 அமெரிக்க டாலர்களை அதாவது 57இலட்சம் ரூபாக்களைப் பரிசாகப் பெறுவதன் மூலம் பிரெஞ்சு நோபல் பரிசாளர்கள் வரிசையில் பன்னிரண்டாவது இடத்தையும், உலகின் 43ஆவது இலக்கியப் பரிசாளரென்ற பெருமையையும் தட்டிக் கொள்கின்றார் இவர்.

★ வண்ணை சே. சிவராஜா

## பெற்றோர்களே...

...5ம் பக்கத் தொடர்

களை குழந்தைகளுக்கு உடுத்துவதை உடனடியாக தவிர்க்க வேண்டும்

அதுபோல உடையில் ஆண் பெண் வித்தியாசம் தெரியாத அளவில் வளர்ந்து வருவதையும தடுக்க முயற்சிக்க வேண்டும். தலைமுடியிலும், பழக்க வழக்கங்களிலும் நாகரீகம் என்ற பெயரால் ஆண் பெண் வித்தியாசமில்லாமல் இருக்கக்கூடிய, பழக்கக்கூடிய நடைமுறையைக் கொண்டு வந்து விட்டு, கல்யாண கட்டத்தில் அவதிப்படுவதை இப்பொழுதே தடுக்க முயற்சி செய்ய வேண்டும். சுதந்திரம் என்ற பெயரால் பலவித சுதந்திரங்கள் இன்று நமக்குக் கிடைத்து அதையும் நாகரீகச் சின்னமாக ஏற்றுக்கொண்டு வாய்க்குச் சுதந்திரம் இருக்கிறது என்பதனால் கண்டபடி பேசுவதோ கண்ட ஆகாரங்களை உட்கொள்வதினாலோ ஏற்படும் அபாயங்களை காட்டிலும் வாழ்க்கை முறையில் சுதந்திரம் என்ற பெயரில் இன்று நடந்து வரும் காரியங்கள் மிகவும அபாயகரமானவை.

நாகரீக வெள்ளத்தோடு நாம் போய்க்கொண்டிருக்கிறோம். ஒருவர் நாம் என்ன செய்ய முடியும் என்று கேட்டுக்கொண்டு சும்மா இருக்கக்கூடாது. தண்ணீர் வெள்ளம் போகும்போது அதைக் கரையில் நின்று பார்த்துக் கொண்டிருப்பவனை யாரும் மெச்சமாட்டார்கள். தண்ணீரோடு போகும் ஒருவனைப் பார்த்து பரிதாபப்படுவார்கள். ஆனால் வெள்ளத்தில் போகிறவனை நீந்திக்கரையில் சேர்ப்பவனை வீரன் என்பார்கள். இப்படித்தான் நாமும் நாகரீகமாகப் போவதைப் பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது. செல்பவர்களாகவும் இருக்கக்கூடாது. நாகரீகமாகப் பேசுகிறவர்களை நம்முடைய கலாச்சார பண்பாட்டிற்கு இழுக்க வேண்டும்.

நெற்றிக்கு பொட்டிடுவது தலைக்கு பூ வைத்துக்கொள்வது உடலுக்கு உடை அணிந்து கொள்வது பெண்கள் கைகால்களிலே மங்கலப் பொருள்களைக் அணிந்து கொள்வது என்பதெல்லாம் நாகரீகத்திற்காக மாத்திரம் மேற்கொள்ளாமல் நம்முடைய கலாச்சாரம் பண்பாடு வழிமுறை இவைகளை நினைவில் வைத்துக்கொண்டு இந்த செயலை செய்ய வேண்டும்.

நம்முடைய குழந்தைகள் அமெரிக்காவிலுள்ள விஞ்ஞானிகள் போல ஆகவேண்டும். என்பதில் செயல்படுவதில் தவறில்லை. ஆனால் அதற்காக நம் குழந்தைகள் அமெரிக்கர்களாகவே ஆகவேண்டும் என்று செயல்படுவதுதான் தவறு ஒவ்வொரு நாட்டிற்கும் பெருமை கலாச்சாரம் பண்பாடு என்பதோடு கடந்தால் விஞ்ஞானத்தில பெருமையே தவிர, கலாச்சாரம் பண்பாடற்ற வெறும் வறட்டு விஞ்ஞானத்தை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆகவே, ஒவ்வொரு பெற்றோரும் தாங்களும் நாகரீகப் போர்வையில் ஏமாறாமல் குழந்தைகள் மாணவர்களை இளைஞர்களை நாகரீகத்தில் பெயரால் ஏமாறாமல் நல்ல அறிவுள்ள குழந்தைகளாகி ஒழுக்கமுள்ள மாணவர்களாக நல்ல திடமுள்ள இளைஞர்களாக நம்முடைய இந்திய கலாச்சார பண்பாட்டில் நாயகர்கள மனித சமுதாயம் வளர ஒவ்வொரு பெற்றோரையும் இந்த சமயம் அழைக்கிறது.

## பத்திரிகை....

...3ம் பக்கத் தொடர்

''அறிவு மிக வேகமாக வளர்ந்து செல்லும் நிலையில் [வேகமான வாசிப்புக்கலையை வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. அறிவின் பெருக்க வெடிப்பு உலகெங்கும் அநுபவிக்கப்பட்டு வருகிறது. அறிவுப் பாய்ச்சலோடு இணைந்து செல்லக்கூடிய விரைவான வாசிப்புத் திறனை வளர்த்தெடுக்க வேண்டிய தேவை உணரப்படுகிறது.'

இது, கலாநிதி சபா. ஜெயராசா 'வாசிப்புஉளவியல்' என்ற தலைப்பில் ஈழமுரசு ஞாயிறு இதழில் (27. 10. 85) எழுதிய கட்டுரையின் முதற்பந்தியாகும். இப்பந்தியில் 'அறிவின் பெருக்க வெடிப்பு' என்பது கலைச்சொல் ஆக்கமாகவோ அல்லது சபா. ஜெயராசா மொழிபெயர்த்து அமைத்த சொற்றொடராகவோ இருக்கலாம். கல்வித்துறைசார்ந்த குறுகியதொரு அறிஞர் கூட்டத்திற்கு இச்சொற்றொடர் எளிதில் விளங்கக்கூடும். ஆனால் கல்வித்துறையிலே நாட்டம் கொண்ட சாமான்ய வாசகனுக்கு இச்சொற்றொடர் என்ன பொருளைத் தரும்.?

இப்புதிய சொற்றொடர் Explosion of Knowledge என்பதன் தமிழாக்கமபோலும். Explosion என்ற சொல்லிற்குப் 'பெருக்க வெடிப்பு' என்ற பொருள் பொருந்தலாம். ஆனால் 'அறிவின் பெருக்க வெடிப்பு' என்பது மயக்கம் தருவதாய் உள்ளது; கருத்துத் தெளிவு இல்லை என்றும் கூறலாம். 'அறிவின் திடீர் எழுச்சி, என்றோ அல்லது 'அறிவின் திடீர்ப் பெருக்கம்' என்றோ கையாண்டிருப்பின் ஆறை சாராத வருக்கும் விளக்கம் உண்டாகும்.

இதேபோல 'உலகெங்கும் அநுபவிக்கப்பட்டு வருகிறது' (being experienced by the whole world என்பதன் தமிழாக்கமோ?) என்பதை உலகெங்கும் உணரப்பட்டு வருகிறது என்று எழுதினால் கூடிய தெளிவு உண்டாகலாம். அடுத்த 'வசனத்தில் தேவை உணரப்படுகிறது' என்று முடிந்துள்ள வாக்கியத்திலா, அதன்முன் உள்ள வாக்கியத்திலா கருத்துத் தெளிவு உள்ளது என்பது, நன்கு சிந்திப்பார்க்குப் புலனாகும். (கலாநிதி சபா, ஜெயராசா மொழி பெயர்த்துத் தந்துள்ள பந்தி அல்ல இது. சொந்தமாகக் கூறியதில் ஆங்கிலவாடை கூடுதலாக வீசவேண்டியது அவசியந்தானா?)

வாக்கியங்களின் பொருண்மைதி அவற்றிற் கையாளப்படும் சொற்களின் ஒழுங்கு முறையிலேதான் தங்குயுள்ளதெனலாம். 'அறிவு மிக வேகமாக வளர்ந்து செல்லும் நிலையில் வேகமான வாசிப்புக் கலையை......' என்று தொடரும் வாக்கியத்தை 'வாசிப்புக் கலையின் வேகத்தை' என்று மாற்றி ஒழுங்கு செய்தால் கூடிய பொருட்டெளிவு உண்டாக மாட்டாதா? அன்றியும் 'Art of-Reading' என்பதை வாசிப்புக் கலை என்னாது வாசிப்பு முறைமை' அல்லது வாசிப்புப் பாங்கு என்று சொன்னால் பொருட் பொருத்தம் அதிகமாகாதா? தெளிவின்றி மயங்கிய நிலையில் வாசகன் ஒருவன் விளவும் விளக்கமாக இவற்றைக் கொள்ளுமாறும் இவற்றை நிபுணத்துவ யோசனைகளாகக் கொள்ளாதிருக்குமாறும் கலாநிதி சபா. ஜெயராசாவைவேண்டுகின்றேன்.

இங்கு கலாநிதி சபா. ஜெயராசாவின் அறிவுக்குத் தலைவணங்கி, அதே சமயத்தில் தெளிவு என நான் கருதியது எதனை என்று விளக்கவே மேற்படி பந்தியை மேற்கோளாகக் கையாண்டேன் என்பதனை, அன்புரிமையுடன் அவருக்குக் கூற விரும்புகின்றேன்.

ஆங்கிலம் சமஸ்கிருதம் முதலிய மொழிகளிலிருந்து சொற்களும் சொற்றொடர்களும் தமிழிலே அவற்றின் வடிவஅமைதியிலோ மொழிபெயர்ப்பிலோ அமைத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன என்ற உண்மையை ஏற்பவன் நான் என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட்டாக வேண்டும் தனித்துவம் (தமிழ் பாதி சமஸ்கிருதம் பாதியாக அமைந்த கலப்புச்சொல்), நபுஞ்சகம், முகங்கொடுத்தல், செல்வாக்குக்கு உட்படுதல், அழுத்தம் கொடுத்தல், ஆரோக்கியமான சூழ்நிலை முதலான பல சொற்களும், சொற்றொடர்களும் தமிழேயாகிவிட்டன.

ஒரு நூற்றுண்டின் காற்பகுதியை (25 ஆண்டுகளை) 'A Quarter of a Century' என்பது ஆங்கில வழக்கு. இதனை நூற்றுண்டின் காற்பாகம் என்னது 'நூற்றுண்டின் கால்' எனக் கையாளவது சுருக்கமாகவும் பொருத்தமாகவும் இருப்பதால் இச்சொற்றொடர் நிலைத்த வாழ்வு பெற்றுவிட்டது. இதனை முன்னுதாரணமாகக் கொண்டு First half of a Century என்பதை நூற்றுண்டின முதல் அரை' எனக் கையாளலாமா? இது அபத்தமாயில்லையா? நூற்றுண்டின் முற்பாதி அல்லது பிற்பாதி என்பது பொருத்தம நோக்கி கையாள்வதுதானே முறை? எழுந்தமானமாகச் சொற்களையும் சொற்றொடர்களையும் கையாளாது சிந்தித்துச் செப்பனிட்டுக் கையாண்டால் அவை வாழ்வு பெறும் என்பதற்காகவே இதனைக்கூறினேன. (இவ்விரு பந்திகளிலும நான் காட்டியுள்ளவை கலாநிதி சபா. ஜெயராசா கையாண்ட 'புதுச் சொற்கள்' அல்ல.)

எவனும் எல்லாம் அறிந்தவனும் அல்லன. எவனும் ஒன்றும் தெரியாதவனும் அல்லன். அறிவை வளர்க்கும் சூழ்நிலை வாய்க்கப்பெற்று அறிவுப் பரிமாற்றத்தையே தனதுதொழிலாகக் கொண்டிருக்கும் ஒருவன் தனது விருப்பத் துறையிலே சிறந்த அறிவைப் பெறுவது வியப்பன்று. எழுத்துத் துறையிலே நாட்டம் வைத்து எழுதி எழுதித் தேர்ச்சிபெற்ற ஒருவன் தன எழுத்தாற்றலை லாவகமாகக் கையாள்வதும் புதுமை அன்று. 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும நாப்பழக்கம், வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்' என்பதை நினைவுகூர்ந்தால் ஒருவர் மீது மற்றவர் காழ்ப்புக் கொள்ளவோ, புறங்கூறவோ, கடினமான வார்த்தைப் பிரயோகம் செய்யவோ அவசியம்நேராது.

ஒரு காலத்தில் பிறநாட்டு நல்லறிஞரின் சாத்திரங்களையும் கலைகளையும் தமிழுக்குக் கொண்டுவர, முயன்ற ஒரு பரம்பரையாலே தான் தமிழ் இன்று இந்த அளவாவது வாழ்ந்து கொண்டிருக்கிறது. இப்பணிகளை மேற்கொண்டு தொடரும் பேராசிரியர் கா.சிவத்தம்பி, கலாநிதி சபா.ஜெயராசா முதலியோராலேயே தமிழ் எதிர்காலத்தில் மேலும் சிறக்கும். ஆனால் இத்தகையோர், தாம் பிறரின் ஆக்கங்களை விமர்சனம் செய்வது போலவே, தமது சொந்த ஆக்கங்களைப் பிறர் விமர்சனம் செய்வதையும் முகங்கொடுத்தால், அது நன்மையே தரும் என்பது உறுதி.

தேருக்கு அது சரியான வழியிலே செல்ல மிண்டிபோடுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இலக்கிய ஆக்கங்களுக்கு வழங்கப்படும் விமர்சனமுமாகும். மிண்டி கற்பாறையாக மாறுதல் கூடாது. விமர்சனம் வளர்ச்சிப் போக்கிற்குத் தடை போடுதலாகாது. அதே சமயம் மிண்டிகளைக் கற்பாறைகள் எனக் கருதி அவற்றைத் தள்ளி அப்பாற் படுத்த முயல்வதும் தவறு. ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் புறந்தள்ளிப் புறக்கணித்தலும் தகாது. 'எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்ற வாக்கு, பழமையாகி விட்டதால் அதனை உதாசீனம் செய்துதான் தீரவேண்டும் என்பதில்லை அல்லவா?

## அமரர்...

...6 ஆம் பக்கத் தொடர்

1958 இல் இலங்கையில் இனக்கலவரம் முதன் முதல் தாண்டவமாடிய காலங்களில் தென் பகுதியிலிருந்த தமிழ் மக்களை மானத்தோடு காப்பாற்றிய பெருமகனுர் இவரே. அக்காலத்தில் தன் நிறுவனத்தின் கப்பற்சேவை மூலம் தமிழ் மக்களைக் கப்பலிலேற்றி வந்து பாதுகாப்பாக தமிழ்ப் பிரதேசங்களில் விட்ட இந்தத் தலைமகனுரை எக்காலத்துக்குமே ஈழத் தமிழினம் மறந்து வாழாது. அவரின் வழியதாக அவருடைய புதல்வர்கள் அவருடைய வர்த்தக நிறுவனங்களை இன்றும் செழிப்போடு பரிபாலித்து வருகின்றனர்.

கல்வித்துறையில் அரும்பணியாளனுய் வணிகத்துறையில் மேன்மை தங்கியவராய் அரசியல் வாழ்வில் கடமை தவருத கண்ணியமானவராய், தமிழ் மக்களின் பொதுநல சேவையில் தன்னையே முழுதும் அர்ப்பணித்த பெரும் தொண்டனுய் விளங்கிய அமரர் திருவாளர் அல்பிரட் லியோ தம்பியையா அவர்களின் பெரும் புகழ் நீடு வாழ்ந்து, அவரின் ஆன்மா இறைவன் திருப்பாதத்தில் கலந்துறைந்து, தமிழ் மக்களுக்கு வாழ்வும் வளமும் அளிக்கவேண்டும்.

★ ஜோ. எகட்டன்

## ஒரு கடமை...

...5ம் பக்கத் தொடர்

இவர் சிந்திப்பாரா? செயல்படுவாரா? .....

'பெயரென்ன? ' ஏதோ யோசித்துக்கொண்டிருந்த சின்னத்தம்பி திடுக்கிட்டுப் பெயர் சொன்னுர், வயது சொன்னுர். டாக்டர் கொப்பியில் எழுதினுர். பிறகு புண்ணுக்கு மருந்தைக் கட்டிவிட்டு கைகழுவினுர்.

' ஊசிமருந்து முடிஞ்சுது... வெளிக்கடையளில வாங்கிக் கொண்டு வந்தால் நாளைக்கு போட்டுவிடுறன...' மருந்தின் பெயரை ஒருசீட்டில் எழுதி நீட்டினுர் டாக்டர், காலைமுதல் காத்திருந்து ஏமாற்றத்துடன டாக்டர் நீட்டிய துண்டைப் பெற்றுக்கொண்டார் சின்னத்தம்பி அறையை விட்டு வெளியே வந்தபோது காயம் அதிகமாக வலிப்பது போலிருந்தது. வெய்யில் உச்சிக்கு வந்துவிட்டது. வீட்டைநோக்கி நடந்தார். இனி வேலைக்குப்போக முடியாது. போனுல் முதலாளி சீறிவிழுவார் எனபது அவருக்குத் தெரியும். யார் இப்பமுப்பு இளமை பார்க்கிறார்கள்?

''அப்பு... மருந்து சட்டியாச்சே ...' சிறுவன அவர்பின்னே ஓடி வந்து கேட்டான்.

ஊசிமருந்து முடிஞ்சுதாம் மோனே... சும்மா மருந்துதான் கட்டிவிட்டவர்...' நிற்காமல் அவர் நடந்தார். சிறுவன் பின் தொடந்து சிரித்தான்.

'உனக்கு விஷயம் தெரியாது அப்பு.. என்று தொடங்கிய சிறுவன விஷயத்தை விளக்கமாகச் சொன்னுன்.

அவர் வியப்போடு அவனைப் பார்த்தார். ஏனோ அவருக்கு ஒளவையாரின் ''கருங்காலிக்கட்டைக்கு நாணுத கோடாலி'' பாட்டு ஞாபகத்துக்கு வந்தது.

''எவ்வளவு வருமானம் வந்தாலும் இப்ப வாழ்க்கைச் செலவு கட்டுப்படாதுதான். அதுக்காக ஏழை எளியவர்களிடம் அஞ்சோ பத்தோ கைநீட்டினுல் அது கைலஞ்சம் தான்...' அவர் சிறுவன் பக்கம் திரும்ப... சிறுவன் துள்ளிக்கொண்டு முன்னுல் ஓடிமறைந்தான். ஒரு சிறுவனுடைய வார்த்தைகள் என்று அவற்றை ஒதுக்கி விடமுடியாதிருந்தது சின்னத்தம்பியருக்கு.

(கற்பகலை)

## யாழ்....

7ம் பக்கத் தொடர்

பூப்பு நிலையிலும் தாய்மை நிலையிலும் உணவில் விசேட பராமரிப்புமுறை இருந்தது பூப்புநிலை பெண்ணின் உடல் வளர்ச்சியில் மட்டுமன்றி மன வளர்ச்சியிலும் மாற்றத்தை ஏற்படுத்துவது. பெண் தனது தாய்மைப் பணியினை அச்சந்தர்ப்பத்திலே நுணுக்கமாக அறிகிருள். அவ்வநிலை உணவுப் பழக்கங்களால் மேலும் விருத்தி செய்தனர். பூப்படைந்த பெண்ணும் தாய்மைநிலையில் குழந்தை பெற்ற பெண்ணும் 31 நாட்களுக்கு தனித்துவமான உணவுப் பழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அதிலும் படிமுறை வளர்ச்சி கடைப்பிடிக்கப்பட்டது. உடல் நிலைக்கேற்றபடி உணவளிக்கப்பட்டது. புரத உணவு சேர்க்கப்பட்டது. பூப்படைந்த பெண் 5 நாட்களுக்குத் தனிமிடத்திலே வைத்து முதிய பெண்ணுல் பாரமரிக்கப்படுவாள். அவ்வைந்து நாட்களில் கத்தரிக் காய்சாறு, வேப்பந்துளிர், பச்சை முட்டை, நல்லெண்ணெய் என்பன காலையிலே கொடுக்கப்படும். மதியம் சோறு காயிலாத கறியுடன் கொடுக்கப்படும். மீனை அல்லது மரக்கறி சரக்கு அரைத்த கூட்டுடன் சேர்த்துப் பாகம் பண்ணி கறியாக்கப்படும். பெண்ணின் உடல்நிலையில் தாளாந்த உணவல்லாத சிறப்புணர்வு வழக்கத்தை இக்காலகட்டத்திலே கடைப்பிடிக்க வேண்டுமென்பது நடைமுறைமூலமே அவளுக்குப் போதிக்கப்பட்டது தண்ணீர் அதிகம் குடிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டது.

பூப்படைந்து எழாம் நாள் குடும்பநிலையில் மட்டுச் சமூக நிலையிலும் சிலநடைமுறைகள் நிறைவேற்றப்படும். உழுத்தங்களி, உழுத்தம்புட்டு, வெண்பொங்கல் அச்சந்தர்ப்பத்திலே உணவில் இடம்பெறும். இவ்வுணவுவகைகள் பெண்ணின் உடல்வளர்ச்சிக் குறியீடுகளாக இன்னும் கிராமத்தவரிடையே நிலவுகின்றன. பூப்படைந்த பின்னர் பெண்வீட்டிலே தடுத்து வைக்கப்பட்டு உணவுத் தயாரிப்பிலே பயிற்சியளிக்கப்படுகிருள். உணவுப் பழக்கங்களையும் ஊன்றிக் கவனிக்கிருள். ஒரு குடும்பத்துக்கு உணவு தயாரிக்கும் போது எவ்வெவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதையும் நன்கு கற்றுக்கொள்கிருள். சுத்தம், உடற்போஷாக்கு, நோய்களுக்கேற்ற உணவு போன்ற பல்வேறுபட்ட சமையற்கலையின் நிர்வாகங்களிலும தேர்ச்சி பெறுகிருள். அது நேரடி ஏட்டுக்கல்வியாக செயற்கையின் வடிவமாக அவளிடம் சேராது. கேள்வி நிலையாக அனுபவமுறையாக இயற்கையின் வடிவமாகப் பெண்ணிடம் நிலைத்துவிடுகிறது. உணவுப் பழக்கங்கள் மூலமாக தாய்மைப் பணியின் முக்கியத்தையும் அவள் உணர்ந்துகொள்ள முடிகிறது.

(தொடரும்)

## யாழ். இந்து கேடயங்களை பெற்றது

நல்லை கந்தன் ஆலய உற்சவத்தில் சிறந்த சமயத் தொண்டாற்றிய சாரணர் குழுக்களுக்கான விருது யாழ். இந்துக் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. மைதானக் காட்சி, பாசறை வாசம், அணிநடைப் பயிற்சி, பதிவேடுகள், நல்லை ஆலய சமூகத் தொண்டு ஆகிய ஐந்து கேடயங்களை யாழ். இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டது.

## மேடை...

...7ம் பக்கத் தொடர்

தனது பெயரை அந்த கறுப்பு பையனுக்கு சூட்ட விரும்புகிருன். சில மாணுமிகள் எள்ளிநகையாடுகிருர்கள். ஆபிரிக்க பையன் உமது உண்மை மகனுகமாட்டான்' எனக் கேலிசெய்கின்றனர். இதனைச் துச்சமென மதித்து பாடுகிருன். முன், தான் பெற்று இழந்த மகன் பற்றிய சிந்தனை பளிச்சிடுகிறது. இப்போது தான் ஒரு தந்தை என்ற உணர்வில் களிக்கிருன். சொந்த மகன் போல மக்சிம்காவை அணைத்து குதூகலிக்கிருன்.

மாலுமியின் சரியான தீர்மானம் சிறுவர்களுக்கு உவகையூட்டுகிறது கைதட்டுதல் தொடர்கிறது. பிள்ளைகளின் ஆத்மீக வளர்ச்சிக்கு அழகு உணர்ச்சிக்கும் இத்தகைய நாடகங்கள் உதவுகின்றன ஆடல் பாடலுடன் கூடிய இந் நாடகம் சிறுவரிடம் அன்பின் பெருமையை, அழகுணர்சியை, பிறரிடம் காட்டவேண்டிய உண்மை அன்பை பதித்து நிற்கிறது. எப்படிப்பட்டவன் நான்? நான் நல்ல நண்பனு? நாட்டின் நற்பிரசையாக மாறவல்லவனு? 'யாவரும் கேளிர்' என்ற உணர்வு பெற்றுள்ளேனு? என்ற வினுக்களை எழுப்பி சிறுவர்களை அன்பு உலகுக்கு உவகையும் நட்பும் செறிந்த உலகுக்கு இட்டுச் செல்கிறது நாடகம், இப்படி அமையவேண்டும் சிறுவர் நாடகம்.

## மரண அறிவித்தல்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்,
உருத்திரபுரத்தை
வசிப்பிடமாகவும் கொண்ட
**சறோஜினிதேவி**
காலமாகிவிட்டார்

தோற்றம்: 28.09.1953 மறைவு: 30.10.85

அன்னூர் நடராஜாவினதும் நாகம்மாவினதும் மகளும், குவைத் உத்தமசிங்கத்தின் ஆசைமனைவியும், உதயசங்கர், உமாசங்கர், மகாலக்ஷ்மி, நித்தியலக்ஷ்மி ஆகியோரின் அன்புத்தாயாரும், வீரசிங்கம் அன்னமுத்து, காலம்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மருமகளும் விக்கினராஜா, செல்லையா, கணேசமூர்த்தி, நித்தியானந்தன், மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஜெகதீஸ்வரி, ஜெகதாம்பிகை, தேவாம்பிகை, ஞானம்பிகை, இராசநாயகி, பிறேம்குமாரி, தவநிதி, சறோஜாதேவி, பகவத்சிங்கம், ஜேசிங்கம், ஸ்ரீகாந்தன் ஆகியோரினது மைத்துனியும், மகேந்திரன், இராஜேந்திரா, மயில்வாகனம், முஜி, பானுமதி ஆகியோருக்கு சகோதர முறையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் ஞாயிற்றுக்கிழமை (03-11-85) காலை 10 மணியளவில் நடைபெறும், நண்பர்களும் உற்ருர் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

93, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ. இராஜேந்திரா

ஈழமுரசு

வீடுகளிலும் சோதனை நடைபெற்றது!

## பெருந்தெருக்கள் திணைக்களத்தின் சகல ஊழியருக்கும் கட்டாய ஓய்வு

(கொடிகாமம்)

பெருந்தெருக்கள் திணைக்களத்தில் கடமைபுரியும் அனைத்து ஊழியர்களும் கட்டாய ஓய்வில் அனுப்பப்பட இருக்கின்றார்கள் இதற்கான பணிப்புரை பெரும்தெருக்கள் திணைக்கள பணிப்பாளரினால் வழங்கப் பட்டுள்ளது. 1986ம் ஆண்டு மாசி மாதம் முதல் பெருந்தெருக்கள் திணைக்களம் மூடப்பட்டு புதிதாக பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை உருவாக்கப்பட இருகின்றது. இதற்கு ஏதுவாகவே இந்த ஊழியர் கட்டாய ஓய்வுத் திட்டம் அமுலாக்கப் படுவதாக தெரிவிக்கப் படுகின்றது. ஏற்கனவே பெருந்தெருக்கள் திணைக்களத்தில் கடமைபுரிந்த சிற்றூழியர்கள் நட்ட ஈட்டுத் தொகையுடன் வேலையிலிருந்து நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

# ஹெலிகொப்டரில் நெடுங்கேணி சென்ற ராணுவம் காடுகளில் நடைபவனியாகச் சென்று தேடுதல்.

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவிலுள்ள பந்தோபஸ்துப் படையினர் ஹெலிகொப்டரில் நெடுங்கேணிக்குச் சென்று காட்டுப் பகுதியில் இறங்கி நடைபவனியாக காடுகளினூடாக ஒட்டுசுட்டானிலுள்ள வெள்ளமலை ஏற்றம் எனுமிடத்திற்கு வந்து வீதியின் இருமருங்கிலுமுள்ள காடுகளுள் பதுங்கியிருந்து அவ்வீதியல் வரும் வாகனங்களை மறித்து சோதனை வேட்டை நடத்துகின்றனர்.

இச்சோதனையின் விளைவாக இ. போ. ச. வண்டிகள், மினிபஸ் ஆகியவற்றைத் தவிர ஒட்டுசுட்டானிலிருந்து வேறு வாகனங்கள் முல்லைத்தீவிற்கு செல்வதில்லை. அத்துடன் துவிச்சக்கர வண்டிகளில் பிரயாணம் செய்யவும் மக்கள் அஞ்சுகின்றனர். முள்ளியவளை, தண்ணீரூற்றுப் பகுதிகளிலிருந்து ஒட்டுத் தொழிற்சாலைக்கு கடமைக்கு வரும் ஊழியர்களும் தற்போது இ. போ. ச. வண்டிகளிலேயே கடமைக்கு வருகின்றனர்.

இதேவேளை பந்தோபஸ்துப் படையினர் மற்றுமொரு யுக்தியையும் கையாண்டு வருகின்றனர். ஹெலிகொப்டரில் ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள காடுகளில் இறங்கி நெடுங்கேணி வரையில் காட்டினூடாக நடந்து சென்று நெடுங்கேணிப் பகுதியிலுள்ள வீடுகளில் தேடுதல் வேட்டையையும் நடத்துகின்றனர்.

"ஹெலிகொப்டர் ஓரிடத்தில் வந்து இறங்கினால் அவ்விடத்தில் இல்லாது பிறிதொரு இடத்திலேயே தேடுதல் நடாத்தப்படுகிறது.

## வியாழன் முதல் ஈழம் வானொலி நிரந்தரஒலிபரப்பு

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் "ஈழம் வானொலி" எதிர்வரும் ஏழாம் திகதி வியாழக்கிழமை முதல் நிரந்தர வானொலிஒலிபரப்பை நடத்தும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இப்பொழுது பரீட்சார்த்தமாக நடைபெறும் இவ்வானொலி ஒலிபரப்பை தினமும் மாலை 3.00 மணிமுதல் 3.30 வரையும் இரவு 8.00 மணி முதல் 8.30 மணி வரையும் 41 மீற்றர் சிற்றலை வரிசையில் கேட்கக் கூடியதாகவுள்ளது. நிரந்தர ஒலிபரப்பும் இதே நேரத்தில் இதே அலைவரிசையிலேயே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வண்ணை பெருமாள் ஆலயத்தில் விசேட வழிபாடு

வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் இன்று காலை பதினொரு மணிக்கு விநாயகர் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாளுக்கும் நவக்கிரக நாயகர்களுக்கும விசேட அபிஷேகமும், ஹோம வழிபாடும் நடைபெறவுள்ளது. நாளை திங்கட்கிழமை காலை எட்டு மணிக்கு சூக்த பாராயண ஹோமமும் மகா பூர்ணகுதி திரவியாபிஷேகமும் நடைபெறும்.

## அறுபது பவுண் கொள்ளை

யாழ்ப்பாணத்திலுள்ள மூன்று நகைக் கடைகளின் தொழிற் பகுதியிலிருந்து சுமார் அறுபது பவுண் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

### யுத்த நிறுத்த....

யாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு இருபது நாள் விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை நேரில் அவதானித்தபின் தாம் தாடகம் திரும்பியுள்ளதாக தெரிவித்த திரு. நெடுமாறன் சென்னையில் நேற்று முதன் முதலாக செய்தியாளர்களிடம இது பற்றிய விபரங்களைத் தெரிவித்தார்.

ஈழத் தமிழர்களின் நிலைமையை நேரில் சென்று அவதானிக்க இந்திய லோக்சபா அங்கத்தவர்களையும், தமிழக சட்டமன்றஉறுப்பினர்களையும் கொண்ட குழு ஒன்றை அங்கு அனுப்ப வேண்டும் எனவும் திரு. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையில் போர் நிறுத்தம் அமுல் செய்யப்பட்டபின்னர் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டும், ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டும் உள்ளதாகவும் திரு. நெடுமாறன் கூறினார்.

### பிரச்சினைக்குத் தீர்வு....

...1ம் பக்கத் தொடர்

டொன்றில் இலங்கைப் பிரச்சினை பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பிரதமர் இவ்வாறு பதிலளித்தார்.

'பிரச்சினைக்குத் தீர்வு காண்பது கடினமல்ல; காண முடியுமென்றே நான் நம்புகின்றேன் நல்லதொரு முடிவுக்கு வர சிலவேளை சில காலம் செல்லக்கூடும்'' எனவும் பிரதமர் மேலும் சொன்னார்.

### யாழ். அசோக் ...

...1ம் பக்கத் தொடர்

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுக்கள் முறைப்பாடு செய்திருந்தன. இதனுடன் சம்பந்தப்பட்ட சாட்சியக்காரர்கள், முறைப்பாட்டுக் காரர்கள் நாளை காலை ஹோட்டலில் ஆஜராகுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ். வீரசிங்கம் மண்டபம், தொலைதொடர்பு அலுவலகக் கட்டடம் ஆகியவை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான சாட்சிய காரர்கள் 5ம் திகதி செவ்வாயன்று குழு முன் ஆஜராகுமாறு முன்னர் கேட்கப்பட்டிருந்தனர்.

இப்போது இவர்களும் நாளை திங்கட்கிழமை காலை குழு முன் ஆஜராகுமாறு கேட்கப் பட்டுள்ளனர் இது சம்பந்தமான முறையீடு யாழ். பிரஜைகள் குழு மூலம் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

## வவுனியாவில் ஆயுதப்படை தொடர்ந்து கடும் வேட்டை

(வவுனியா)

வவுனியாப் பகுதியில் சாத்திரி கூழாம் குளத்துக்கும் பம்பை மடுவுக்குமிடையேயுள்ள காட்டுப் பகுதியில் ஆயுதப் படையினர் நேற்றுக் கடுமையான தேடுதலை நடத்தினர்.

ஆயுதப் படையினர் இங்கு முகாமிட்டிருந்து தேடுதல் நடத்துவதாகக் கூறப்படுகின்றது.

நேற்று இப்பகுதியில் பல மணி நேரமாக குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுகளும் கேட்டன.

ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றொருவர் காயத்துடன் தப்பிச் சென்றதாகவும் தெரியவந்துள்ளது.

### வயல்களுக்குச்....

வித சன நடமாட்டமும் இருக்கக் கூடாதென்ற அரசின் கட்டளையால் வன்னிப்பகுதியில் மக்கள் சதா பதட்டத்துடனேயே வாழ்கின்றனர்.

பெரும் பகுதியான வயல்கள் இம்முறை விதைக்கப் படாது இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### பூஸாவிலுள்ள....

வழங்கப்படுவதில்லை. அவர்களுக்குப் போதிய உணவு வழங்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தேவையான உடுப்புகள் வழங்கப்படவேண்டுமெனவும் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பூஸா முகாமில் தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவர் மனநிலை குன்றியவராகக் காணப்படுவதால் அவரை மனநோய் சிகிச்சை நிபுணர் முன்னால் ஆஜர் செய்து அறிக்கை பெறுமாறும் குழு சிபார்சு செய்துள்ளது.

### நாவற்குழி

திற்கு தடை செய்யப்பட்டிருந்ததால் யாழ். நகரிலிருந்து அப்பாதையூடாகச் செல்லும் வாகனங்கள் அனைத்தும் கோப்பாய் ஊடாகவே சென்றன.

முகாமிற்கு பாதுகாப்பாக அடுக்கப்பட்டிருந்த மண்மூடைகளும் கூடாரங்களும் கடந்த சில தினங்களாகப் பெய்யும் மழை காரணமாக விழுந்து விட்டதாகவும், அதை மீண்டும் அடுக்குவதற்காகவுமே வீதி மூடப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

### ஆஸ்பத்திரி இரத்த ...

நோயாளிகள் பெருகி வருவதாலும் இரத்த வங்கியில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பல நோயாளிகள் பாதிப்படையவும் நேருகிறது.

பாடசாலை மாணவர்கள், பொது ஸ்தாபனங்கள், பொது மக்கள், யாழ். வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கி அவசர நோயாளிகளை காப்பாற்றும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

வங்கியில் இரத்தம் இல்லாததன் காரணமாக, இரத்தத் தரகர்கள் இதனைக் காரணமாக வைத்து வெளியாரிடம் கூலி கூலியாக பணம் பெறுவதாகவும் கூறப்படுகின்றது.

## இ. தொ. கா. அட்டையும் அகப்பட்டது

நேற்று முன்தினம் முழங்காவிலில் படையினரால் கண்டு பிடிக்கப்பட்ட முகாமிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவருடைய அடையாள அட்டையும் கண்டு பிடிக்கப்பட்டதாக அரசாங்க அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ் லொறி....

டன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி லொறியின் சாரதியான கே. கதிர்காமநாதன் எமது நிருபரிடம் தெரிவிக்கையில், அரிசி, தவிடு போன்றவற்றை ஏற்றிக்கொண்டு தாம் யாழ்ப்பாணம் வந்ததாகவும் மூன்றுமுறிப்பில் லொறி குறைந்த வேகத்தில் வந்தபோது, சவரக்கத்திகளுடன் மூவர் லொறியில் பாய்ந்து ஏறிக்கொண்டார்களாம்.

அவர்கள் கத்தியால் தமது கையில் வெட்டி தன்னிடமிருந்த சிறிய தொகைப் பணத்தையும் தன்னுடன் வந்தவரிடமிருந்த முந்நூறு ரூபாவையும் பறித்தார்களாம்.

லொறி இங்குள்ள பன்சலவொன்றை அண்மித்தபோது இச்சம்பவம் நடைபெறுவதை சீருடையினர் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

### ஒரு சடலம்....

மதுக்கத்தக்க ஒருவர் பொது மக்களால் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவர் மரணமடைந்துவிட்டதாக டாக்டர் அறிவித்துள்ளார். இவரது பக்கட்டுக்குள் சங்கத்தானை அம்மன் வீதியைச் சேர்ந்த நமசிவாயம் சோமசுந்தரம் என்ற பெயரில் அடையாள அட்டை இருந்தது. உறவினர்களின் வருகைக்காக இவரது சடலம் ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

உ

ஓம் நமோ நாராயணாய

இன்று சனீஸ்வர பகவான் இடம் பெயர்கிறார்.

இதனை முன்னிட்டு

இன்று காலை 8 மணி தொடக்கம் நாளை (திங்கள்) காலை வரை

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்குப்

தேவியர்க்கும், இதர பரிவார மூர்த்திகட்கும்

விசேட அபிஷேக, ஓம, யாக, சாந்தி பூசைகளும்

நவக்கிரக நாயகர்கட்கு-சிறப்பாக சனீஸ்வரமூர்த்திக்கு

தோஷநிவர்த்தி, சாந்தி பூசைகள், நாம நட்சத்திர அர்ச்சனைகள்

திருவருள் துணைகொண்டு நடாத்தப்பெறுகின்றன

பக்த கோடிகள் அனைவரும் தரிசித்து அருள்பெற்று உய்வார்களாக!

'ஈழமுரசு' சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேசன் ஸ்தாபனத்தாரால் 87, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள வர்களது அச்சகப் பகுதியில் 3-11-1985 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336